

தீரன் சின்னமலை



காலிங்கராயன்

பொன்விழா ஆண்டு

1961 - 2011

# கொங்கு நண்பர்கள் சங்கம்

சென்னை - 600 014.



**விழாத்தலைவர்**
தமிழறிஞர் கொங்குமாமணி
திரு. **சிலம்பொலி செல்லப்பனார்**



**கொங்குமாமணி - 2012**
திரையுலக மார்கண்டேயர்
திரு. **சிவகுமார்**

உழைப்போம்! உணர்வோம்!! உயர்வோம்!!!



செயலாளர்
திரு. **ஆர்.செல்வராஜ்**



தலைவர்
திரு. **பரணி கே.பாலசுப்பிரமணி**



பொருளாளர்
திரு. **கே.கே.ரமேஷ்**

# பொன்விழா ஆண்டு சிறப்பு மலர் - 2012

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

'கொங்கு மாமணி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட சான்றோர்கள்

**2001 ஆம் ஆண்டு**

1. தெய்வத்திரு.கே.எம்.சென்னியப்பன்
2. டாக்டர். பழனி ஜி.பெரியசாமி
3. திரு. ஜெம் ஆர். வீரமணி

**2002 ஆம் ஆண்டு**

4. திரு. எஸ்.வி.பாலசுப்பிரமணியம்
5. திரு. இரா. காந்தி

**2003 ஆம் ஆண்டு**

6. திரு. டி.ஆர்.கார்த்திகேயன், I.P.S. (Retd.)
7. திருச்சி. ஆர். தேவராசன்
8. திரு. ஜி.ஆர்.சுந்தரவடிவேல்

**2004 ஆம் ஆண்டு**

9. முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன்
10. டாக்டர் சி.பழனிவேலு
11. டாக்டர். பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்

**2005 ஆம் ஆண்டு**

12. NSIT. திரு. எம்.முருகேசன்
13. திரு. கே.பழனியப்பன்
14. திரு.சி.கே.இராமசாமி

**2006 ஆம் ஆண்டு**

15. திரு.நல்லா கோவிந்தசாமி
16. சக்திமசாலா திரு.பி.சி.துரைசாமி
17. திரு. வி.கே.தங்கவேல்

**2007 ஆம் ஆண்டு**

18. புலவர் செ.இராசு
19. திரு. பெஸ்ட் எஸ்.இராமசாமி
20. பத்மஸ்ரீ டாக்டர். க.ரா.பழனிசாமி

**2008 ஆம் ஆண்டு**

21. ஆடிட்டர் மு.பாலசுப்பிரமணியம்
22. டாக்டர் என்.எம்.வீரய்யன்
23. தெய்வத்திரு. ப.செங்கோடன்

**2009 ஆம் ஆண்டு**

24. டாக்டர் வி.எஸ்.நடராஜன்
25. திரு.கே.செல்லமுத்து
26. பத்மஸ்ரீ ஏ.சக்திவேல்

**2011 ஆம் ஆண்டு**


27. அட்லஸ் எம்.நாச்சிமுத்து
28. கே.ஏ.செங்கோட்டுவேல்

**"கொங்குமாமேதை" விருது பெற்றவர்**

அருட்செல்வர் டாக்டர். நா.மகாலிங்கம்

(2006 ஆம் ஆண்டு)

# கொங்கு மாமணி



## திரையுலக மார்கண்டேயர் திரு. சிவகுமார்

கோவை மாவட்டம் சூலூர் அருகிலுள்ள காசிகவுண்டன் புதூர் கிராமத்தைச் சேர்ந்த அமரர் திரு. ராக்கியா கவுண்டர் – அமரர் திருமதி பழனியம்மாள் தம்பதியரின் மகனாக 1941 ஆம் ஆண்டு பிறந்தவர் திரையுலக மார்கண்டேயர் சிவகுமார் அவர்கள்.

சூலூர் கழக உயர்நிலைப்பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி முடித்தார். பள்ளியில் படிக்கும்போதே ஓவியம், மாறுவேடப்போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி முதலான போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் பல பெற்றவர். ஓய்வு நேரங்களில் ஓவியம் வரைவது இவருக்குப் பொழுதுபோக்காகவும், பிடித்த ஒன்றாகவும் இருந்தது.

எஸ்.எஸ்.எல்.சி. படிப்பு முடிந்ததும் ஓவியக்கலையின் மேல் கொண்ட காதலால் சென்னை ஓவியக்கலைக் கல்லூரியில் சேர்ந்து ஆறு ஆண்டுகள் ஓவியக்கலையில் மேற்படிப்பு படித்து, முதல்வகுப்பில் தேர்ச்சி பெற்றார். இந்த ஆறு ஆண்டு கல்லூரி வாழ்க்கை அவரை ஒரு சிறந்த ஓவியராக்கியது. ஓர் ஓவியருக்கு வேண்டிய கற்பனைத் திறன், ஆழ்ந்த சிந்தனை, ஒழுக்கம், நிதானம், பொறுமை, விடா முயற்சி, கலையில் பற்று, சாதிக்கும் வைராக்கியம் போன்ற சிறந்த குணங்களை சிவகுமார் அவர்கள் பெற்றுள்ளதால், அவரால் ஒரு சிறந்த ஓவியர் என்ற பரிணாமத்தை அடைய முடிந்தது.

திறமை வாய்ந்தவர்களையும், தகுதி வாய்ந்தவர்களையும் திரையுலகம் தேடிச் சென்ற காலமது. அதே சமயத்தில் திறமை குறைந்தவர்கள் அதிர்ஷ்டத்தாலோ பரிந்துரை பேரிலோ, பண பலத்தாலோ திரையுலகில் காலூன்றி நின்றுவிட முடியாத காலம் அது. திறமை குறைந்தவர் ஓரிரு படத்தில் நடித்தாலும், மக்கள் அவர்களை நிராகரித்துவிடுவர். இந்தக்கால கட்டத்தில் அழகும், நடிப்புத் திறமையும், உடல் கட்டமைப்பும், இனிய பண்புகளும்

நிறைந்திருந்த சிவகுமார் அவர்களுக்கு திரைப்படத்துறையில் பெரிய ஜாம்பவானாக விளங்கிய AVM நிறுவனம் தயாரித்த ‘காக்கும் கரங்கள்’ என்ற படத்தில் நடிக்கும் அரிய வாய்ப்பு கிடைத்தது. 1965 ஆம்ஆண்டு படம் வெளிவந்தது. திரு. சிவகுமார் அவர்களுக்குப் பாராட்டுகள் குவிந்தன.

இதன் விளைவாக வாய்ப்புகள் தேடிவந்தன. இதுவரை 192 படங்களில் நடித்து மாபெரும் சாதனை படைத்துள்ளார். இதில் 175 படங்களில் கதாநாயகனாக நடித்து பெரும் புகழ் பெற்றார். கந்தன் கருணை, உயர்ந்த மனிதன் அன்னக்கிளி, பத்ரகாளி, சொல்லத்தான் நினைக்கிறேன், ரோசாப்பூ ரவிக்கைக்காரி, ஏணிப்படிகள், வண்டிச் சக்கரம், பௌர்ணமி அலைகள், சிந்து பைரவி, மறுபக்கம் முதலான படங்கள் இவருக்குப் பெரும் புகழ் சேர்த்த படங்களாகும். ஒவ்வொரு படத்திலும் அந்தப் பாத்திரமாகவே மாறி விடுவது அவருக்குள்ள தனிச்சிறப்பாகும். சின்னத்திரையிலும் தன் முத்திரையைப் பதித்தவர்.

‘மறுபக்கம்’ படத்திற்கு மத்திய அரசின் ‘தங்கத்தாமரை’ விருது கிடைத்தது. மறுபக்கம் படத்தில் மிகச்சிறப்பாக, மிகவும் அருமையாக, மிகவும் அற்புதமாக நடித்த இவருக்கு மத்திய அரசின் சிறந்த நடிகர் விருது கிடைப்பதாக இருந்தது. கடைசி நேரத்தில் சிலர் செய்த சதியால் அந்த விருது கிடைக்கவில்லை. ஆனால் மக்கள் மனத்தில் சிறந்த நடிகர் எனப்பெயர் பெற்று விட்டார்.

மாநில அரசின் ‘சிறந்த நடிகர்’ விருதை மூன்று முறையும், ஃபிலிம் ஃபேர் சிறந்த நடிகருக்கான விருதை இரண்டு முறையும் பெற்றுள்ளார். தமிழ்நாடு அரசு ‘வாழ்நாள் சாதனையாளர்’ விருது அளித்து இவரைக் கௌரவப்படுத்தியது. ஃபிலிம் ஃபேர் பத்திரிகையும் இவருக்கு ‘வாழ்நாள் சாதனையாளர்’ விருது அளித்து பெருமைப்படுத்தியது. திரையுலகில் நடிகர் திலகம் சிவாஜிகணேசன், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஆகிய இருவரின் பேரன்பையும் பெற்ற சிறப்புக்குரியவர். முதல்வர் செல்வி ஜெ.ஜெயலலிதா, கலைஞர் மு.கருணாநிதி ஆகிய இரு தலைவர்களின் அன்பையும் பெற்றவர்.

‘திரையுலக மார்கண்டேயர்’ என அன்பாக அழைக்கப்படும் திரு. சிவகுமார் அவர்களின் இளமை மற்றும் கட்டான உடற்கட்டிற்குக் காரணமாக இருப்பது அவரது சீரான உணவுப்பழக்கமும், உடற்பயிற்சியும், ஒழுக்க நெறியான வாழ்க்கை முறையுமேயாகும். 50 ஆண்டுகளாக யோகாசனப்பயிற்சி செய்து வருகிறார். புகை பிடித்தல், மது அருந்துதல்,

சூதாட்டம் போன்ற பழக்கங்கள் அறவே கிடையாது. காபி, தேனீர்கூட குடிப்பது கிடையாது.

திரு. சிவகுமார் ஒரு சிறந்த எழுத்தாளர். இது ‘ராஜபாட்டை அல்ல’, ‘டைரி’ ஆகிய இரண்டு வாழ்க்கை வரலாற்று நூல்களை சிறப்பாக எழுதியுள்ளார். வார இதழ்களிலும், பண்டிகை கால சிறப்பு மலர்களிலும், சான்றோர்கள் பற்றிய சிறப்பு மலர்களிலும் நிறைய கட்டுரைகளை இனிய எளிய நடையில் திறம்பட எழுதியுள்ளார்.

இவர் எழுத்தாளர் மட்டுமல்லாது சிறந்த சொற்பொழிவாளராகவும் விளங்குகிறார். இவருடைய அபார நினைவாற்றல், அயரா உழைப்பு, கொங்கு நாட்டு பேச்சு நடை, ஆழ்ந்த அறிவு முதலியன இவரைத் தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளர்களுள் ஒருவராக ஆக்கியுள்ளது. கேட்போர் வியக்கும் வண்ணம், அவையைக் கட்டிப்போட்டு தங்கு தடையின்றி இவர் சொற்பொழிவாற்றும் பாங்கு அனைவராலும் பெரிதும் பாராட்டப்படுகிறது; இரசிக்கப்படுகிறது; மீண்டும் மீண்டும் கேட்க வைக்கிறது. கம்பன் என் காதரலன், தவப்புதல்வர்கள் டிவிடி க்கள் உலகப்புகழ் பெற்றவையாக தமிழ் கூறும் நல்லுலகமெங்கிலும் விளங்குகின்றன. நேரிலும், விஜய் தொலைக்காட்சி வாயிலாகவும் இவருடைய சொற்பொழிவைக் கேட்டவர்கள், வியந்து பாராட்டாமல் இருக்க முடியாது. முன்பின் முரணின்றி, சிறு பிசிறு கூட இல்லாமல் எப்படி இவரால் கம்பனின் காப்பிய வரிகளையும், இராமாயணக்கதை சுருக்கத்தையும் கையில் ஒரு சிறுகுறிப்பு கூட வைத்துக்கொள்ளாமல் இவ்வளவு சிறப்பாக, சுவையோடு கூற முடிகிறது என்று ஆச்சரியப்படாதவர்கள் மிகவும் குறைவு.

திரு.சிவகுமார் ஒரு மனித நேயப் பண்பாளர். சிவகுமார் கல்வி அறக்கட்டளை மூலமாக கடந்த 33 ஆண்டுகளாக மாணவர்களுக்கு பல வகையிலும் உதவியுள்ளதோடு பரிசுகள் வழங்கி வருகிறார். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் வளர்ச்சிக்கு பல வகையிலும் உதவியுள்ளதோடு, நிறைய நன்கொடையும் வழங்கியுள்ளார். 1977 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற நட்சத்திர இரவு கலை நிகழ்ச்சி, 2001 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற சந்தோஷ மாலை கலை நிகழ்ச்சி, 2002 ஆம் ஆண்டு ஈரோட்டில் நடந்த ஆனந்த மாலை கலை நிகழ்ச்சி ஆகியவை நடத்திட பெரும் உதவி செய்துள்ளார். இதுவரை சங்கத்தில் யாரும் செய்யாத சாதனையாக தன்னுடைய குடும்பத்தில் 2 மகன்கள், ஒரு மகள் உட்பட நான்குபேரை சங்கத்தில் உறுப்பினராகச் சேர்த்துள்ளார்.

சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பற்றிய இவரது 'தவப்புதல்வர்கள்' சொற்பொழிவும், அது மக்கள் மத்தியில், குறிப்பாக இளைஞர்களிடத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கமும் இவரது நாட்டுப்பற்றுக்கும், தியாகங்களைப் போற்றும் உயர் பண்புக்கும் என்றும் சான்றாகத் திகழும்.

கம்பராமாயணத்தை அடுத்து, தற்போது மகாபாரதத்தை ஆய்வு செய்து கொண்டிருக்கிறார். சுதந்திரப் போராட்ட வீரன் தீரன் சின்னமலை சிலை அமைக்க முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 1995 ஆம் ஆண்டு 40 பேர் கொண்ட குழுவை நியமித்தார். அந்தக்குழுவில் சிலை அமைப்பு கண்காணிப்புக்குழுத் தலைவராக சிவகுமார் அவர்கள் நியமிக்கப்பட்டார். திரு. சிவகுமார் அவர்கள் குதிரையின் படத்தைத் தேர்ந்தெடுத்து அரிய ஆலோசனை வழங்கினார்.

திரு.சிவகுமார் அவர்களுடைய மனைவி திருமதி லட்சுமி. அமைதியும் அடக்கமும் நிறைந்தவர். திரு.சிவகுமார் அவர்களின் வெற்றிக்கு முக்கிய பின்புலமாக விளங்குபவர் இவரே என்றால் மிகையாகாது. இவரது மகன் திரு. சூர்யா – மருமகள் திருமதி ஜோதிகா. இரண்டாவது மகன் திரு. கார்த்தி – மருமகள் திருமதி ரஞ்சனி; மகள் திருமதி பிருந்தா – மருமகன் திரு. சிவகுமார். மகன்கள் இருவரும் தங்களது திரையுலகச் சாதனைகளால் கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்து வருகிறார்கள்.

சிறந்த நடிகர், சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், சிறந்த ஓவியர், மனிதநேய மாண்பாளர், கம்பன் காதலன், தவப்புதல்வர்கள் புகழ் பாடும் நாட்டுப் பற்றாளர் போன்ற பன்முகங்கள் கொண்டு கொங்குச் சமுதாயம் பெருமைப் படும் அளவில் பல சாதனைகளைப் படைத்து சமுதாய முன்னேற்றத்திற்கு உன்னதமாய்ப் பணியாற்றியமைக்காக, திரையுலக மார்கண்டேயர் திரு. சிவகுமார் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு மாமணி'' விருது வழங்கி கௌரவிக்கிறது.


# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

2011 ஆம் ஆண்டு "கொங்கு சாதனையாளர்" விருது
வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு. எம்.பொன்னம்பலம் | சிறந்த சாலைப்போக்குவரத்து மற்றும் சமுதாயப்பணி |
| 2. | திரு. நா.புஷ்பராஜ் | சிறந்த ஊடகப்பணி |
| 3. | திரு. கை.கந்தசாமி | சிறந்த கால்நடை மற்றும் சமுதாயப்பணி |
| 4. | திரு. தமிழன்பன் பி.முத்துசாமி | சிறந்த இலக்கியப்பணி |
| 5. | திரு. ஜி.இராமசாமி | சிறந்த கணக்காளர் பணி |
| 6. | டாக்டர் கே.பிரகாசம் | சிறந்த மருத்துவப்பணி |
| 7. | திரு. எம்.இராஜகோபாலன் | சிறந்த தொழில் அதிபர் மற்றும் சமுதாயப்பணி |
| 8. | திரு. வி.பி.பிரபாகர் ஐ.ஆர்.எஸ் | சிறந்த அரசுப்பணி |
| 9. | திரு. டி.ஆர்.சந்தான கோபாலகிருஷ்ணன் | சிறந்த கல்விப்பணி |
| 10. | திருமதி இராஜேஸ்வரி ஞானசுந்தரம் | சிறந்த ஊரக வளர்ச்சிப்பணி |

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் கே.கே.இலட்சுமணன்

டாக்டர் கே.கே.இலட்சுமணன் அவர்கள் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயலாளராக 1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை மிகச்சிறப்பாகப் பணியாற்றினார். அப்போது சங்கத்தின் தலைவராக இருந்தவர் அருட்செல்வர் கொங்கு மாமேதை நா.மகாலிங்கம் அவர்கள் ஆவார்.

நாமக்கல் மாவட்டம் களிமேடு கிராமத்தைச் சேர்ந்த காளியண்ண கவுண்டர் – திருமதி அம்மையக்காள் தம்பதியரின் மகனாக 1932 ஆம் ஆண்டு பிறந்தவர். முதுகலை வரை சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்றார். 1955 ஆம் ஆண்டிலிருந்து சென்னை மாநிலக் கல்லூரியில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றினார். அலெக்ஸாண்டர் ஹூம் போல்டு அறக்கட்டளை உதவியுடன் திசு வளர்ப்பு பற்றி ஜெர்மனி நாட்டின் மைன்ஸ் பல்கலைக்கழகத்தில் இரண்டு ஆண்டுகள் ஆராய்ச்சி செய்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

1967 ஆம் ஆண்டிலிருந்து 1978 ஆம் ஆண்டுவரை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராக மிகச்சிறப்பாகப் பணியாற்றினார். பின்னர் 1978 ஆம் ஆண்டிலிருந்து 1992 ஆம் ஆண்டுவரை கோவை பாரதியார் பல்கலைக்கழத்தில் மிகவும் அர்ப்பணிப்போடு தாவரவியல் துறைத் தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றினார். 1986 ஆம்ஆண்டு Indo America Visiting Professor Exchange Programme மூலமாக அமெரிக்கா சென்று மியாமி பல்கலைக்கழகத்தின் மூலம் ஃபிளாரிடா கடற்கரை சதுப்பு நிலக் காடுகளை ஆராய்ந்தவர். பாரதியார் பல்கலைக்கழகத்தில் தாவரவியல் துறையைத் தோற்றுவித்து உயரிய நிலை மையமாகும் அளவுக்கு வளர்த்தார். 250க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் நடந்த கருத்தரங்குகளிலும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார்.

1992 ஆம் ஆண்டு அரசுப்பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பின்னரும் கல்லூரி ஆசிரியர்களுக்கு பல பயிற்சி முகாம்களை நடத்தினார். 13 மாணவர்கள் இவருடைய சீரிய மேற்பார்வையில் முனைவர் பட்டமும், 46 மாணவர்கள் எம்.ஃபில் பட்டமும் பெற்றனர். 80 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், இன்றும் சமூகசேவை, இயற்கை வேளாண்மை, மூலிகை ஆராய்ச்சி என இவருடைய செயல்கள் தொடர்கின்றன.


ஈரோடு PV Trust ன் நிறுவனர் மற்றும் தலைவராக உள்ளார். கடந்த 22 ஆண்டுகளாக Native Medicals Charitable Trust (NMCT) அறங்காவலராக பல பயனுள்ள பணிகளைச் செய்து வருகிறார். மெக்சிகோ நாட்டின் World Cultural Counsil உறுப்பினராக உள்ள சிறப்புக்குரியவர் இவர்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் கூட்டங்கள் நடத்த 1974 ஆம் ஆண்டு மயிலையில் உள்ள பட்டக்காரர் நிலையத்தைக் கேட்டு வாங்கியது, கொங்கு வேளாளர் சமுதாயத்தை தமிழக அரசு பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பாடுபட்டது, கல்வி நிறுவனங்களில் பணியாற்றியவர்கள் மற்றும் அரசுப்பணிகளில் இருந்த பல கொங்குச் சமுதாய நண்பர்களை சங்கத்தில் உறுப்பினராகச் சேர்த்தது, மாதாந்திரக் கூட்டங்களை நடத்தி சங்கத்தின் செயல்பாடுகளை தீவிரப்படுத்தியது போன்ற சமுதாயப்பணிகளை ஆற்றி சங்கத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்தவர் இவர். செய்தி மடலில் கொங்குச் சமுதாயம் குறித்தும், தாவரவியல் குறித்தும், நோய் தீர்க்கும் மூலிகைகள் குறித்தும் பயனுள்ள பல கட்டுரைகளை எழுதியுள்ளார். சமுதாயப்பற்று மிக்கவர்.

இவருடைய மனைவி திருமதி கமலம் இவருடைய சாதனைகளுக்கும், சேவைகளுக்கும் உந்துசக்தியாகவும், உதவியாகவும் இருந்து வருகிறார்.இவருடைய மகன் டாக்டர் எல்.காந்த், மருமகள் டாக்டர் (திருமதி) மிருதுளாகாந்த் ஆகியோர் கோவையிலும், மகள் டாக்டர் (திருமதி) பிரியா முரளிதரன், மருமகன் டாக்டர் முரளிதரன் ஆகியோர் இங்கிலாந்திலும் மருத்துவப் பணியாற்றி வருகின்றனர்.

மிகச்சிறப்பாக கல்விப்பணியாற்றியதோடு, கொங்குச் சமுதாய முன்னேற்றத்திலும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றியுள்ள களிமேடு டாக்டர் கே.கே.லட்சுமணன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. கே.சி.கருப்பன்

நாமக்கல் மாவட்டம் கொண்டிசெட்டிபட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த திரு.சின்னண்ண கவுண்டர் – திருமதி இராக்காயம்மாள் தம்பதியரின் மகனாக 1933 ஆம் ஆண்டு பிறந்தார். நாமக்கல் தெற்கு அரசினர் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்து, கோவை பி.எஸ்.ஜி கல்லூரியில் இண்டர்மீடியட் படிப்பையும், சென்னை லயோலா கல்லூரியில் பி.ஏ. பட்டப்படிப்பையும் முடித்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. பட்டமும், இமாசலப் பிரதேசப் பல்கலைக்கழகத்தில் எம். எட்., பட்டமும் பெற்றார்.

பட்டதாரி ஆசிரியராகப் பதினோறு ஆண்டுகளும், தலைமை ஆசிரியராக இருப்பத்தி மூன்று ஆண்டுகளும் அனைவரும் வியக்கும் வகையில் சிறப்பாகப் பணியாற்றி, 1991 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

1993 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை நாமக்கல் ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கத்தின் வட்டத் தலைவராகவும், மாவட்டத் தலைவராகவும் பொறுப்பேற்று சங்க உறுப்பினர்களின் குறைகள் தீர்ப்பதற்காகப் பாடுபட்டுவருகிறார்.

1972 ஆம் ஆண்டு பாண்டமங்கலம் உயர்நிலைப்பள்ளி விளையாட்டுத் திடலுக்காக ஐந்து ஏக்கர் நிலம் இலவசமாக இவருடைய தீவிர முயற்சியால் பெறப்பட்டது. 1984 ஆம் ஆண்டு பொட்டிரெட்டிப்பட்டி மேல்நிலைப்பள்ளிக்கு விளையாட்டு நிலம், மின்மோட்டார் இணைப்புடன் கிணறு, கட்டடங்கள், ஆய்வுக்கூடம் முதலானவற்றிற்கு ஆவண செய்து பள்ளியின் தரத்தை பெரிதும் உயர்த்தினார்.

1978 முதல் தற்போது வரை மாவட்ட சாரண ஆணையாளராகப் பணிபுரிந்து வருகிறார். சாரணச் செம்மல் என்ற விருது பெற்றுள்ளார். 1968 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டுவரை நாமக்கல் மாவட்ட ஆசிரியர் கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பு வகித்தார்.

**1976 – 1982** ஆண்டுகளில் இருமுறை சென்னைப் பல்கலைக்கழக செனட் உறுப்பினராகச் செயல்பட்டார். **1981 – 1988** வரை எட்டு ஆண்டுகள் நாமக்கல் கல்வி மாவட்டத் தலைமை ஆசிரியர் கழகச் செயலாளராகச் சிறப்பாக பணியாற்றினார். **1989** ஆம் ஆண்டு முதல் **1991** ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு மாநிலத் தலைமை ஆசிரியர் கழக மாநிலத் தலைவராகப் பொறுப்பேற்று இருந்தார். மூன்றுஆண்டுகள் தலைமை ஆசிரியர் குரல் என்ற இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

**1982** ஆம் ஆண்டு இவருடைய மிகச்சிறப்பான ஆசிரியப் பணியைப் பாராட்டி தமிழ்நாடு அரசு நல்லாசிரியர் விருது வழங்கி கௌரவித்தது. நாமக்கல் நகராட்சி எல்லையில் மோகனூர் சாலையில் ஆசிரியர் குடியிருப்பை உருவாக்கியதிலும், கே.கே.குடியிருப்புக் காலனி உருவாக்கியதிலும் பெரும்பங்கு வகித்தார். **1968** முதல் **1980** வரை நாமக்கல் ஆசிரியர் வீடுகட்டும் சங்கத்தின் தலைவராக இருந்தார்.


நாமக்கல் மாவட்ட திறந்தவெளி விளையாட்டரங்கு கட்டப்பட்டதில் இவருக்குப் பெரும்பங்கு உண்டு. இன்று இவருடைய தலைமையில் இயங்கும் நாமக்கல் வட்ட ஓய்வூதியர் சங்கம் தமிழகத்திலேயே தலைசிறந்த முன்மாதிரியான வட்டச்சங்கமாக செயல்பட்டு 4000 உறுப்பினர்களைக்கொண்டு ஓய்வூதியர்களுக்குத் தேவையான அனைத்தையும் செய்து வருகிறது.

சேலம் மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி, கார்கில் போர்வீரர் குடும்பத்தினர்க்கு நிதி உதவி, குஜராத் நிலநடுக்கத்தால் அல்லல்பட்ட மக்களுக்கு பொருள் உதவி, சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவி, ‘தானே’ புயல் நிவாரண நிதி ஆகியவற்றிற்கு நிதி திரட்டியதில் இவர் பெரும்பங்கு கொண்டவர்.

எளிமை, பிறர்க்குதவி செய்யும் மனித நேயம், அயரா உழைப்பு போன்ற குணங்கள் கொண்ட இவருடைய மனைவி திருமதி பாக்கியலட்சுமி. மகன் பி.கே.அருள்பார்த்திபன் கோவையில் சொந்தமாக தொழில் செய்து வருகிறார். மருமகள் திருமதி கிருத்திகா பொறியியல் கல்லூரியில் உதவிப் பேராசிரியர். மகள் மலர்மல்லி; மருமகன் மின்வாரியத்தில் பொறியாளர்.

மிகச்சிறப்பாகக் கல்விப்பணியாற்றி தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்றதோடு ஓய்வு பெற்றபின்னர் ஓய்வூதியதாரர்களின் நலனுக்காகச் சிறப்பான சேவை செய்து வரும் திரு. கே.சி.கருப்பன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப்பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் க.அர்த்தநாரி எம்.எஸ்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் கருமாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு.கந்தசாமி – திருமதி பழனியம்மாள் தம்பதியருக்கு 1947 ஆம்ஆண்டு மகனாகப் பிறந்தார். பள்ளிப்படிப்பை திருச்செங்கோடு அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியிலும், பி.யு.சி. படிப்பை பாளையங்கோட்டை புனித சேவியர் கல்லூரியிலும், எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்பை 1971 ஆம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியிலும் முடித்தார். பின்னர் 1980 ஆம் ஆண்டு ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரியில் எம்.எஸ். (பொது) பட்டம் பெற்றார்.

1973 ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு அரசுப்பணியில் மருத்துவராக சிறப்பாகப் பணியாற்றினார். 1988 ஆம் ஆண்டு அரசுப்பணியை விட்டு விலகி சேலத்தில் ஸ்ரீகோகுலம் மருத்துவமனையை நிறுவினார். 2003 ஆம் ஆண்டு சேலத்தில் ஸ்ரீ கோகுலம் ஹெல்த் சர்வீஸ் (பிரைவேட்) லிமிடெட் என்ற மருத்துவமனையை நிறுவியுள்ளார். இந்த இரண்டு மருத்துவமனைகளின் நிர்வாக இயக்குநராக தற்போது சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். இந்த இரண்டு மருத்துவ மனைகளும் மருத்துவ வசதிகளைக் குறைந்த கட்டணத்தில் சேலம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில் நிறுவப்பட்டு மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இந்த மருத்துவ மனைகளில் பொது மருத்துவம் மற்றும் மகப்பேறு மருத்துவத்தில் பட்டமேற்படிப்பு துவக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ கோகுலம் செவிலியர் கல்லூரி நிறுவப்பட்டதோடு மருத்துவம் சார்ந்த இளங்கலை பாடங்களும் தொடங்கப்பட்டுள்ளன.

மனித உயிர் காக்க உதவும் நவீன வசதிகள் கொண்ட ஆம்புலன்ஸ் சேவையை அண்டை மாவட்டங்களில் ஏற்படுத்தியுள்ளார். பல இலவச மருத்துவ முகாம்களை நடத்தியுள்ளார். குறிப்பாக, மலைவாழ் மக்களுக்காகவும், பிறவி குறைபாடு உள்ள, பிளந்த

உதடு மற்றும் பிளந்த அன்னம் உள்ள குழந்தைகளுக்காக இலவச அறுவை சிகிச்சை முகாம்களையும் நடத்தினார்.


2001, 2003 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் மருத்துவத்துறையில் சிறந்த சேவைக்காக சேலம் மாநகராட்சி விருதுகளைப் பெற்றுள்ளார். 2008, 2009 ஆம் ஆண்டு சேலம் ரோட்டரி சங்கம் இவருக்கு தொழில் வல்லுநர் விருது வழங்கியுள்ளது. 2001 ஆம் ஆண்டு சேலம் கட்டடப் பொறியாளர் சங்கமும், 2000,2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுகர்வோர் கண்காணிப்பு அமைப்பும் சிறந்த மருத்துவ சேவைக்கான விருதை இவருக்கு வழங்கின.

2000–2001 ஆம் ஆண்டு சேலம் ஏர்போர்ட் லயன்ஸ் கிளப் சிறந்த இலவச மருத்துவ முகாம்களை நடத்தியதற்கான விருதினை வழங்கியுள்ளது. கிருஷ்ணகிரி, ஆத்தூர் மற்றும் சேலம் இந்திய மருத்துவ சங்கம் சார்பில் மருத்துவத் துறையில் சிறந்த சேவைக்கான விருதினை வழங்கியுள்ளது. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சிறந்த மருத்துவருக்கான விருதினை வழங்கியுள்ளது.

இவருடைய மனைவி டாக்டர் செல்லம்மாள் M.D., DGO பட்டங்கள் பெற்றவர். ஸ்ரீகோகுலம் மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவராக உள்ளார். இவர் கணவரின் வெற்றிகளுக்கு முக்கியக் காரணமாக விளங்குகிறார். இத்தம்பதியருக்கு அ.அகிலா, அ.யாமினி என்ற இரு மகள்களும், அ.கோகிலன் என்ற மகனும் உள்ளனர். மகள் டாக்டர் அகிலா MS (OG) வின் கணவர் டாக்டர் ந.ராஜேஷ் M.D., DM (GE). இருவரும் ஸ்ரீகோகுலம் மருத்துவமனையில் பணியாற்றி வருகின்றனர். மகள் டாக்டர் யாமினி B.E., Ph.D., வின் கணவர் டாக்டர் க.விஜயகுமார் B.E., Ph.D. இருவரும் மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் (UK) பணிபுரிந்து வருகின்றனர். மகன் டாக்டர் அ.கோகிலன் MBBS., DWB (RD) மருத்துவப் பட்டமேற்படிப்பு படித்து வருகிறார்.

சேலம் நகரில் அனைத்து வசதிகளோடு இரண்டு சிறப்புமிக்க மருத்துவமனைகளை நிறுவி, குறைந்த செலவில் தரமான மருத்துவச் சேவையை மக்களுக்கு வழங்கி வருவதோடு, மனிதநேயம் மிக்க சிறந்த மருத்துவராக விளங்கும் டாக்டர் க.அர்த்தநாரி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. என்.சின்னசாமி

கோவை மாவட்டம் அன்னூர் அருகில் உள்ள தேவம்பாளையம் என்ற ஊரைச் சேர்ந்த நஞ்சப்ப கவுண்டர் – திருமதி மாராத்தாள் தம்பதியருக்கு என். சின்னசாமி, என்.நடராஜன், என்.கந்தசாமி, என்.ரத்தினம் ஆகிய நான்கு மகன்கள் பிறந்தனர். இவர்களில் மூத்தவர் என்.சின்னசாமி அவர்கள். இவர் 1945 ஆண்டு பிறந்தவர்.

கோவையில் ஆர்.எஸ்.புரம், டி.பி.ரோடு, அரசு கலைக்கல்லூரி சாலை, பீளமேடு அவிநாசி சாலை, நேரு ஸ்டேடியம் முதலான இடங்களில் மக்களின் பேராதரவுடன் சிறப்பாக இயங்கிவரும் நிறுவனம் கோவை பழமுதிர் நிலையமாகும்.

கோவை பழமுதிர் நிலையத்தின் நிறுவனர் திரு.என்.சின்னசாமி அவர்கள் தன்னுடைய வாடிக்கையாளர்களுக்கு நல்ல தரமான உயர்தர காய்கறிகளைச் சிறந்த முறையில் சரியான விலையில் விற்பனை செய்கிறார். அவர் ஆரம்பத்தில் ஒரு மில் தொழிலாளியாக வேலை செய்துவந்தார். அவருடைய பணி மாலை 3 மணியளவில் முடிவடையும். அதன் பிறகு தன்னுடைய வருமானத்தை மேம்படுத்திக்கொள்வதற்காக வீடுவீடாகச் சென்று பழங்களை விற்றுவந்தார். அவ்வாறு விற்றதில் நல்ல தரமான பழங்கள் பற்றிய அறிவு அவருக்கு ஏற்பட்டது. பிறகு 1985 ஆம் ஆண்டில் அவர் தன்னுடைய பகுதி நேர வேலையை முழுமூச்சுடன் பெரிய அளவில் செய்ய முடிவு செய்தார். அவர் தன் மூன்று சகோதரர்களுடன் சேர்ந்து ஒரு சிறிய பழக்கடையை கோவை பீளமேடு பகுதியில் ஆரம்பித்தார். சிறிது சிறிதாக தன் தொழிலில் முன்னேற்றம் அடைந்து அவர் மேலும் மூன்று பழமுதிர் நிலையங்களை கோவையில் ஆரம்பித்தார். மேலும், ஈரோடு, திருப்பூர் போன்ற இடங்களிலும், தென் இந்தியாவின் பல பகுதிகளிலும் கிளைகள் தொடங்கப்பட்டன. ஒவ்வொரு நிறுவனத்திலும் ஒரு நாளைக்கு 2500 வாடிக்கையாளர்கள் வருகிறார்கள். 2008 ஆம் ஆண்டு அவர்களின் ஆண்டு வருமானம் ரூ. 12 கோடியை எட்டியது.

தரம் மற்றும் வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவை ஒன்றே அவரின் ஒரே தாரக மந்திரமாக இருந்தது. சில்லறை வியாபாரம் மட்டுமின்றி பெரிய நிறுவனங்களுக்கும், உணவகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கும், கோவையைச் சுற்றியுள்ள பல பகுதிகளுக்கும் விற்பனை செய்கிறார்.

2003 ஆம் ஆண்டு பழமுதிர் நிலையம் தன்னுடைய ஏற்றுமதி இறக்குமதி பிரிவை நிறுவியது. அதன்மூலம் அரபு தேசம் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்தரமான பழங்கள் குறைந்த விலைக்கு வாடிக்கையாளர்களுக்கு விற்கப்படுகின்றன.


திரு.சின்னசாமி அவர்களின் சேவையைப் பாராட்டி புதுடெல்லியில் உள்ள ஆல் இண்டியா அச்சீவர்ஸ் கான்பிரன்ஸ் 2003 ஆம் ஆண்டிற்கான 'ஜெம் ஆப் இந்தியா' விருது வழங்கிச் சிறப்பித்தது. வொக்கேசனல் எக்ஸ்சலன்ஸ் விருது உடுமலைப்பேட்டை ரோட்டரி கிளப் சார்பில் அவருக்கு வழங்கப்பட்டது. சி.ஐ.ஐ.தமிழ்நாடு நிறுவனம் திரு.சின்னசாமி அவர்களுக்கு தமிழ்நாட்டின் சிறந்த 101 தொழில் அதிபர்களில் ஒருவராக அங்கீகாரம் கொடுத்துள்ளது.

"காலில் போடும் செருப்பை அழகாக அடுக்கிக் கண்ணாடி Show ரூமில் வைத்து விற்பனை செய்கிறார்கள். ஆனால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உண்ணும் பழங்களை தெருவோரம் புழுதியில் சாக்கடை ஓரத்தில் வைத்து விற்பனை செய்கிறார்கள். அதைப்பார்க்கும் போது மனசு பதறுகிறது" என்கிறார் திரு.சின்னசாமி. கடின உழைப்புடன் கூடிய முயற்சி திருவினையாக்கும் என்பதற்குச் சிறந்த உதாரணமாய்த் திகழ்கிறார் திரு. சின்னசாமி.

இவருடைய மனைவி திருமதி சரஸ்வதி இவருடைய வெற்றிகளுக்குத் துணை நிற்கிறார். இத்தம்பதியருக்கு இரண்டு மகள்களும் ஒரு மகனும் உள்ளனர். மூத்த மகள் திருமதி கவிதா. இவருடைய கணவர் திரு. வஞ்சிமுத்து அவர்கள் கோவையில் பூம்ராங் ஐஸ்கிரீம் தொழில் செய்து வருகிறார். இரண்டாவது மகள் திருமதி சாரதா. இவரது கணவர் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் ஈரோடு மகாராஜா குழும நிறுவனங்களின் இயக்குநர். மகன் துரைராஜ் MIB பட்டம்பெற்றவர்; தந்தைக்குத் துணையாக அவருடைய தொழிலை கவனித்து வருகிறார். அவரது மனைவி திருமதி மிதுளா பிரியதர்ஷினி.

தன்னம்பிக்கை, அயரா உழைப்பு, நேர்மை, குறைவில்லாத அன்பான உபசரிப்பு, அனுசரிப்பு, கவனிப்பு ஆகியவற்றைத் தாரகமந்திரமாகக் கொண்டு முதல் தலைமுறை தொழிலதிபராக விளங்கும் திரு. என்.சின்னசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. கா. நல்லதம்பி

நாமக்கல் நகரில் 1964 ஆம் ஆண்டு திரு. எம்.காளியப்பன் – திருமதி பாப்பு தம்பதியரின் மகனாகப் பிறந்தவர். பி.எஸ்சி. டி.பி.ஏ. பட்டங்கள் பெற்றுள்ள இவர் K.L.S.Transports என்ற நிறுவனத்தைத் தொடங்கி, போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்.

நாமக்கல் கொங்கு வேளாளர் சங்கத்தின் அடிப்படை உறுப்பினராக இருந்து தற்போது வரை அச்சங்கத்தின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பணியாற்றி வருகிறார். நாமக்கல் கொங்கு நண்பர்கள் சங்கம் துவங்கிய நாள்முதல் உறுப்பினராகப் பணியாற்றியதுடன் உதவி செயலாளர் மற்றும் செயலாளர் பொறுப்பினை ஏற்று சிறப்பாகப் பணியாற்றினார். கடந்த 9 வருடங்களாக சங்கத்தின் தலைவர் பொறுப்பேற்று மிகச்சிறப்பாகச் சேவையாற்றி வருகின்றார். கொங்குச் சமுதாய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக சங்கத்தின் மூலம் பல சேவைகளைச் செய்து வருகிறார்.

கொங்கு இன மக்கள் தங்களது நியாயமான உரிமைகளைப் பெற்றிட நடைபெற்ற சுய உரிமைப் போராட்டங்கள் அனைத்திலும் கலந்துகொண்டார்.

1985 ஆம் ஆண்டுமுதல் நாமக்கல் வட்ட லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் இணைச்செயலாளராகவும், பின்னர் தொடர்ந்து மூன்றுமுறை செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். தற்போது அச்சங்கத்தின் தலைவராகவும், தமிழ்நாடு மாநில லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவராகவும் சிறப்பாகவும், பலரும் பாராட்டும் வண்ணமும் பணியாற்றி வருகிறார்.

லாரி தொழில் சிறப்பாக நடைபெறுவதற்கும், லாரி உரிமையாளர்களின் நியாயமான கோரிக்கைகள் மற்றும் நலன்களுக்காகவும் அயராது பாடுபட்டு சேவையாற்றி வருகிறார்.

மேலும் தென் மாநில லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் துணைத்தலைவராகவும் பொறுப்பேற்று மாநில மற்றும் அகில இந்திய அளவில் மத்திய, மாநில அரசுகளுடன் நடைபெறும் பேச்சு வார்த்தைகளில் கலந்துகொண்டு லாரி தொழிலின் மேம்பாட்டிற்காக சேவை செய்து வருகிறார்.லாரி தொழிலின் மேம்பாட்டிற்காக பல போராட்டங்கள் நடத்தியும் பேச்சு வார்த்தை நடத்தியும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டவர்.

நாமக்கல் ரோட்டரி சங்கத்தில் இணைந்து 17 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். பல்வேறு மாவட்ட கமிட்டிகளின் தலைவர், உதவி கவர்னர், பொருளாளர், செயலாளர், தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்து பொதுமக்களுக்காக இரத்ததானம், கல்வி உதவி, இலவச மருத்துவமுகாம் போன்ற சமூக சேவைகளைச் செய்து வருகிறார். நாமக்கல் மாவட்ட பாரத் சாரணர் சங்கத்தின் மாவட்ட உதவி ஆணையராகப் பொறுப்பு வகித்து பொதுமக்களின் பாதுகாப்பிற்கான செயல்களிலும் ஈடுபட்டு சேவை செய்து வந்துள்ளார்.

மனித நேயம் மிக்க பண்பாளராக விளங்கும் இவரது சிறப்பான சேவையைப் பாராட்டி ரோட்டரி சங்கம் மற்றும் பல்வேறு அமைப்புகள் விருதுகளை வழங்கி கௌரவித்தது. All India Motor Transport Congress ன் 75 ஆம் ஆண்டு பவள விழா நிகழ்வின் போது அதன் தலைவர் திரு. ஜி.ஆர்.சண்முகப்பா அவர்களால் இவருக்கு ‘டிரான்ஸ்போர்ட் சாம்ராட்’ என்ற உயரிய விருது வழங்கப்பட்டது.

இவரது வாழ்நாளில் இதுவரை 75 முறை இரத்ததானம் வழங்கி பல்லுயிர் காக்கும் சேவையைச் செய்துள்ளார். இளைஞர் இயக்கமான ஜேசீஸ் இயக்கத்தில் 10 ஆண்டுகளுக்குமேல் உறுப்பினராக இருந்து சேவைகள் செய்துள்ளார்.

இவரது வெற்றிக்குப் பின்னால் உள்ளவர் இவரது மனைவி திருமதி என்.மல்லிகா. இத்தம்பதியருக்கு என். சிந்துஜா MCA, என். அனுஜா, B.E., ஆகிய இருமகள்கள் உள்ளனர்.

சிறந்த தொழிலதிபர், நாமக்கல் கொங்கு நண்பர்கள் சங்கத்தலைவர், தமிழ்நாடு மாநில லாரி உரிமையாளர்கள் சம்மேளனத் தலைவர், நாமக்கல் வட்ட லாரி உரிமையாளர்கள் சங்கத்தலைவர் முதலான பொறுப்புகளையேற்று மிகச்சிறப்பாகச் செயல்பட்டு வருவதோடு சமுதாயசேவை, சமூக சேவை ஆகியவற்றிலும் சிறந்து விளங்கும் திரு.கா.நல்லதம்பி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. எம்.மணி

ஈரோடு மாவட்டம் சிவகிரி கிராமத்தைச் சேர்ந்த திரு.முத்துசாமி கவுண்டர் – திருமதி ராமாயி அம்மாள் தம்பதியரின் மகனாக 1951 ஆம் ஆண்டு பிறந்தார். சிவகிரி அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்தார். விவசாயத்திலும், தொழிலிலும் மிகவும் நாட்டம் கொண்டவராக விளங்கியதால், மேலே படிக்க விருப்பமில்லாமல் விவசாயத்தில் ஈடுபட்டார்.

விவசாயத்தில் நவீன கருவிகளைப் பயன்படுத்திட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு வலசுமணி லேத் வர்க்ஸ் என்ற நிறுவனத்தை 1986 ஆம் ஆண்டு தொடங்கினார். விவசாயத்திற்குத் தேவையான ADVs, விதைக்கும் கருவிகள், சாண எரிவாயு உருளைகள் போன்றவற்றைத் தயாரித்தார். இந்தக் கருவிகள் விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றன. 1992 ஆம் ஆண்டு முதல் Tractor Tipping Trailors, Gauge Wheels, Cultivators, Levelers முதலான எந்திரங்களையும் கருவிகளையும் தயாரித்தார். இந்த இயந்திரங்களும், கருவிகளும் தமிழகமெங்கிலும் நல்ல வரவேற்பைப் பெற்றன. இந்த நிறுவனம் விவசாயம் சம்பந்தமான கருவிகளைத் தயாரிக்கும் சிறந்த நிறுவனங்களில் ஒன்றாக விளங்க ஆரம்பித்தது.

கொங்கு நாட்டில் மஞ்சள் சாகுபடி செய்யும் விவசாயிகள் தேவைக்காக 1995 ஆம் ஆண்டு மஞ்சளை வேகவைக்கும் கொதிகலன்கள், மஞ்சள் பாலிஷர்ஸ் ஆகியவற்றையும் தயாரித்தது இந்நிறுவனம். 2000 ஆம் ஆண்டிலிருந்து நவீன முறைகளையும், தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தி கதிரடிக்கும் இயந்திரங்கள் தயாரிப்பு சம்பந்தமான ஆராய்ச்சியில் இந்த நிறுவனம் ஈடுபட்டது. 2002 ஆம் ஆண்டு நவீன நெல் கதிரடிக்கும் இயந்திரத்தை உருவாக்கியது இந்த நிறுவனம். நெல் தவிர மற்ற தானியங்களையும் கதிரடிக்கும் வகையில் பின்னர் கதிரடிக்கும் இயந்திரத்தில் தேவையான மாற்றங்கள்

செய்யப்பட்டன.2004 ஆம் ஆண்டு பலவகை தானியங்களையும் கதிரடிக்கும் நவீன இயந்திரம் உருவாக்கப்பட்டு விவசாயிகளுக்கு விற்கப்பட்டன. இந்த நவீன கதிரடிக்கும் இயந்திரத்திற்கு (Multicrop Thresher) காப்புரிமை வாங்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு மே மாதம் வலசுமணி ஃபார்ம் மெசின்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தை திரு. மணி தொடங்கினார். பலவிதமான ஆராய்ச்சிகள் மேற்கொண்டு பல தானிய கதிரடிப்பு இயந்திரத்தை அற்புதமாக வடிவமைத்து உருவாக்கி சாதனை படைத்த திரு. எம்.மணி அவர்களுக்கு L Ramp Award of Excellence என்ற விருதை முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் 28–11–2007 அன்று சென்னை IIT யில் நடைபெற்ற விழாவில் வழங்கிப் பாராட்டினார்.

7–12–2006 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் Intellectual Peoples and Economic Growth Association என்ற அமைப்பு திரு.எம்.மணி அவர்களுக்கு Great Achiever of Industrial Excellence Award-2005 என்ற விருதை வழங்கி கௌரவித்தது.

இவருடைய மனைவி திருமதி உமாமணி இவருடைய வெற்றிகளுக்குத் துணை நின்றவர். எம்.புவனேஷ், எம்.செல்வகுமார் என்ற இரண்டு புதல்வர்கள் உள்ளனர். திரு.எம்.புவனேஷ் பி.இ.படித்துள்ளார். மனைவி பெயர் திருமதி பிரதிபா. திரு. எம்.செல்வகுமார் பி.டெக் பட்டம் பெற்றுள்ளார். இவருடைய மனைவி பெயர் திருமதி சத்யா. புதல்வர்கள் இருவரும் தந்தைக்கு உதவியாக உள்ளதோடு, தொழிலை மேலும் முன்னேற்றச் செய்யும் பணியிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

நமது நாட்டில் விவசாயத் தொழில் மிகவும் நலிந்துள்ளது. பல பிரச்சினைகளுள் விவசாய வேலைக்கு ஆள் கிடைக்காத ஒன்றும் முக்கியமானது. இத்தகைய சூழ்நிலையில் விவசாயத்தில் இயந்திரங்களையும், கருவிகளையும் பயன்படுத்துவது அவசியமாகும். விவசாயிகள் பயன்பெற நவீன விவசாய இயந்திரங்களையும், கருவிகளையும் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்கி சாதனைகள் படைத்துள்ளார், திரு.மணி அவர்கள்.

தொழில் துறையில் ஈடுபட்டு, விவசாயிகள் நலனுக்காக அவர்களுக்குத் தேவைப்படும் இயந்திரங்களைத் தயாரித்து நாட்டு நலனுக்காகப் பாடுபட்டுவரும் திரு.எம்.மணி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருதை வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## கொங்குநாடு கே.முத்துசாமி

கரூர் மாவட்டம் மொஞ்சனூர் கிராமம் பசுபதிபாளையத்தில் மொஞ்சனூர் கொங்கு தேர்வேந்தர் குலத்தில் திரு.குமாரசாமி கவுண்டர் – திருமதி மரகதம்மாள் தம்பதியருக்கு 27–09–1995 அன்று மகனாகப் பிறந்தார். தற்போது தென்னிலை கிராமம் கூனம்பட்டி அருகில் உள்ள கவுண்டர் தோட்டம் என்று அழைக்கப்படும் அவரது பண்ணை இல்லத்தில் வசித்து வருகிறார், கொங்குநாடு கே.முத்துசாமி.

பத்தாவது வயதிலேயே தந்தையை இழந்த இவர், தாயார் மற்றும் தாய்வழி பாட்டனார் அரவணைப்பில் வளர்ந்தார்.1972 ஆம்ஆண்டு SSLC தேறியதோடு, அவரது படிப்பு முடிவுக்கு வந்தது.

சிறுவயதிலேயே குடும்பப் பொறுப்பை ஏற்ற இவர் 1977 ஆம் ஆண்டு முதல் விவசாய சங்கப்பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். திரு. சி.முத்துசாமி கவுண்டர், திரு. இரா.கிருஷ்ணசாமி கவுண்டர் ஆகிய நம்மினத் தலைவர்கள் பொறுப்பேற்று நடத்திய தமிழ்நாடு மாநில விவசாய சங்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். இந்தச் சங்கம் விவசாயிகளின் மேம்பாட்டிற்காகவும், உரிமைக்காகவும் நடத்திய பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டார். தற்போது இந்தச் சங்கத்தின் கரூர் மாவட்டச் செயலாளராகப் பொறுப்பேற்று விவசாயிகளின் நலன்களுக்காகப் பாடுபட்டு வருகிறார்.

1985 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையில் உள்ளார். 1990 ஆம்ஆண்டு பேரவைத்தலைவர் கோவை செழியன் இவரை க.பரமத்தி ஒன்றிய கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவைத் தலைவராக நியமித்தார். பின்னர் 1994 ஆம் ஆண்டு கரூரில் நடைபெற்ற கொங்கு வேளாளக்கவுண்டர்கள் பேரவையின் மூன்றாவது மாநில மாநாட்டின் பிரசாரக் குழுவில் இடம் பெற்றுப் பணியாற்றினார். அதற்குப்பிறகு பேரவையின் கரூர் மாவட்டத் துணைத்தலைவராகப் பொறுப்பேற்று கடந்த 15 ஆண்டுகளாக சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். இந்தக்

காலக்கட்டத்தில் திருச்சி ஆர்.தேவராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அனைத்து மாநில மாநாடுகளிலும் பல முக்கிய பொறுப்புகள் ஏற்று மிகச்சிறப்பாக மாநாடுகளின் வெற்றிக்குப் பாடுபட்டார்.

கரூரில் 19–12–2010 அன்று நடைபெற்ற விவசாயிகளின் அரசியல் உரிமை மாநாட்டு மலர் வெளியீட்டுக் குழுவின் செயலாளராகவும், 12–10–2008 அன்று நடைபெற்ற கரூர் கொங்கு நண்பர்கள் சங்கத்தின் வெள்ளிவிழா மலர்க் குழுவின் உறுப்பினராகவும், மொஞ்சனூர் கரிய காளியம்மன் முத்துசாமி திருக்கோயில் குடமுழுக்கு விழா மலர்க்குழுவின் செயலாளராகவும் பொறுப்பேற்று பலரும் பாராட்டும் வண்ணம் செயல்பட்டார்.

கரூர் மாவட்ட உபயோகிப்பாளர் சங்கத்தின் தலைவராக 1995 ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறார். கரூர் மாவட்டத்தில் தென்னிலை தொலைபேசி இணைப்பகத்தை STD வசதியுள்ள தொலைபேசி இணைப்பகமாக மாற்றியதில் இவருடைய முயற்சியே முக்கியக் காரணமாக இருந்தது. தென்னிலை பகுதியில் 150 விவசாயிகள் கொண்ட மேய்ச்சல் ஆடு வளர்ப்போர் சங்கத்தின் தலைவராக உள்ளார். இந்த விவசாயிகளுக்கு தேசிய ஆடு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக உயர்ரக மேய்ச்சல் இன பொழிகிடா இலவசமாக கிடைக்க ஏற்பாடு செய்தார்.

மொஞ்சனூர் கிராம துல்லிய பண்ணை திட்டம் மூலம் விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர்பாசனம் அமைக்க ஏற்பாடு செய்தார். இதனால் கடும் வறட்சியிலும் விவசாயிகள் காய்கறிகளைப் பயிரிட்டு வருகின்றனர்.

கொங்குச் சமுதாயப்பற்று மிகுந்த இவர் கோவை செழியன் அவர்களின் பேரன்பைப் பெற்றவர். கொங்குச் சமுதாய மக்கள் மேம்பாட்டிற்காகவும். விவசாயிகள் நலன்களுக்காகவும் சங்கம், பேரவை, கழகம் என பல கொங்கு அமைப்புகளில் பொறுப்பேற்றுப் பணியாற்றி வருகிறார். போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றுள்ளார்.

இவருக்கு மோகனச் செல்வி என்ற மனைவியும், சிவசபரி என்ற மகனும் உள்ளனர் மகன் பி.இ.முடித்துள்ளார்.

கொங்கு வேளாளர் சமுதாயப்பணியிலும், கஷ்டப்பட்டாலும் நஷ்டப்பட்டாலும் விவசாயமே கதியென்று அல்லல்படும் விவசாயிகளின் முன்னேற்றத்திற்கான பணியிலும் கடந்த 20 ஆண்டுகளாக தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ள கொங்குநாடு கே. முத்துசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது அளித்துப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



**திரு. டி.சங்கர்**

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அருகில் நல்லாகவுண்டம்பாளையம் திரு. தேவராஜன் – திருமதி தெய்வானை தம்பதியருக்கு 1973 ஆம் ஆண்டு பிறந்தவர் திரு.டி.சங்கர்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அரசு உயர்நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்புவரை படித்தார். விவசாயக் குடும்பத்தில் பிறந்து பருத்திக் காட்டில் வேலை செய்து இவரைப் படிக்க வைத்த தந்தையார், 'நீ படிக்க லாயக்கு இல்லை' என்று கூறி திருச்செங்கோடு அருகில் உள்ள நல்லாம்பாளையம் என்ற ஊரில் இருந்த இவருடைய தாத்தா வீட்டிற்கு அனுப்பிவிட்டார். அங்கு ஒரு வருடம் தறி வேலை பார்த்தார். அடுத்த வருடம் சங்கர் நல்லசமுத்திரம் பள்ளியில் சேர்க்கப்பட்டார். பள்ளியில் சேர்ந்த முதல்நாளே ஆங்கில ஆசிரியர் இவரைப் புத்தகத்தை எடுத்துப் படிக்கச் சொன்னார். சங்கர் தட்டுத்தடுமாறிப் படித்து முடித்ததும். அவர் நன்றாகப் படித்ததாகக் கூறி ஆசிரியர் ஒரு சாக்லேட் பரிசு அளித்தார். சங்கர் முதன்முதலாக பாராட்டின் சுவையை ருசித்தார். அதன்விளைவு பத்தாம் வகுப்பில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார்.

பனிரெண்டாம் வகுப்பு முடித்தவுடன் திரைப்படத்துறையில் இயக்குநராக ஆக வேண்டும் என்ற கனவுடன் முயற்சிகள் செய்தார். கோவை விவசாயக்கல்லூரியில் பி.எஸ்சி. (அக்ரி) பட்டப்படிப்பை முடித்தார். படிப்பை முடித்தவுடன் மீண்டும் சினிமா கனவு. ஒன்றரை வருடகாலம் கனவுடன் சென்னையில் சுற்றிக்கொண்டிருந்தார். அப்போது இவரைச் சந்தித்த உறவினர் ஒருவர், "ஞானசேகரன் என்று ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி

இருக்கிறார். பணியில் இருந்தவாறே மோக முள் என்ற படைத்த இயக்கியுள்ளார். நீயும் படித்து நல்ல நிலைக்கு வந்த பிறகு சினிமா உலகுக்குச் செல்'' என்று அறிவுரை கூறினார். இந்த வார்த்தைகள் திரு.சங்கரை நன்கு யோசிக்க வைத்தன.

எம்.எஸ்சி.(அக்ரி) படிக்க நுழைவுத் தேர்வு எழுதினார். உதவித்தொகையுடன் ஹரியானாவில் NTRI என்ற கல்லூரியில் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதை முடித்ததும் அப்படியே சிவில் சர்வீஸ் தேர்வு எழுதலாம் என்று முடிவு செய்து டெல்லிக்குக் கிளம்பினார். அவரை ஐ.ஏ.எஸ். படிக்க உதவியவர் அவரது கல்லூரித்தோழி, வைஷ்ணவி. அவர் டெல்லிக்கு வந்து வேலைபார்த்துக்கொண்டே திரு.சங்கரை ஐ.ஏ.எஸ். தேர்வுக்குப் படிக்கப் பொருளுதவி செய்தார். நான்கு முறை தேர்வு எழுதினார். வெற்றி கிட்டவில்லை.

சிவில் சர்வீஸ் தேர்வில் கிடைத்த அனுபவத்தை வைத்து, அண்ணா நகரில் 36 மாணவர்களுடன் 'சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமி' தொடங்கினார். கடுமையாக உழைத்தார். பயிற்சி மாணவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் கொடுத்து தக்க பயிற்சியளித்தார். அதன் விளைவு தற்போது வருடம் ஒன்றுக்கு 300க்கும் அதிகமானவர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறார். கடந்த வருடம் தமிழகத்திலிருந்து சிவில் சர்விஸ் தேர்வுகளில் வெற்றிபெற்ற 96 பேர்களில் 36 பேர் இவரது சங்கர் ஐ.ஏ.எஸ்–அகாடமியில் பயிற்சி பெற்றவர்களாவர்.

2000 ஆம் ஆண்டு வைஷ்ணவியை மணம் புரிந்து கொண்டார். திரு.டி.சங்கர் – திருமதி வைஷ்ணவி தம்பதியருக்கு சஹானா, சாதானா ஆகிய இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர்.

இவர் சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றி பெற்றிருந்தால், அவர்மட்டும்தான் ஐ.ஏ.எஸ்– பணியில் சேர்ந்திருப்பார். அவர் தோற்றதினால் இன்று பல ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ் களை உருவாக்கிக்கொண்டு வருகிறார்.

தமிழகத்திலிருந்து நிறைய பேர் இந்தியக் குடிமைப்பணிகளுக்கான ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ்.தேர்வுகளில் வெற்றி பெற்றிட வேண்டும் என்ற இலட்சியத்தோடு செயல்பட்டு சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமி மூலம் சாதனைகள் புரிந்துள்ள திரு. டி.சங்கர் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. கிருபா புஷ்பராஜ்

தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் அவர்களின் பேரன் திரு. கிருபா புஷ்பராஜ். தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவரும், நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவருமாகிய பொறியாளர் திரு. நா.புஷ்பராஜ் – சங்கத்தில் 14 ஆண்டுகளாக செயற்குழு உறுப்பினராகப் பணியாற்றி வருபவரும், சங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள "சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் – 50 ஆண்டு வரலாறு (1961–2011)" என்ற நூல் உட்பட பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளவருமான முனைவர் மணிமேகலை ஆகியோரின் புதல்வர் இவர்.

32 வயது நிரம்பிய இவர் கோவை P.S.G. தொழில்நுட்பக்கல்லூரியில் B.E., (ECE) பட்டம் பெற்றார். ECE பிரிவில் கல்லூரியில் முதல்இடம் பெற்றுச் சாதனை படைத்தார். பெங்களூரில் உள்ள Siemens நிறுவனத்தில் ஓராண்டு சிறப்பாகப் பணியாற்றிய பின்னர், கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து M.S பட்டம் பெற்றார். கருத்தரங்குகளில் சமர்ப்பிக்கப்பட்ட இவருடைய கட்டுரைகள் பலரது பாராட்டையும் பரிசுகளையும் பெற்றன.

M.S.பட்டம் பெற்ற பின்னர், INTEL நிறுவனத்தில் சேக்ரோமென்ட்டோ நகரில் பணியில் சேர்ந்தார். 2009 ஆம் ஆண்டு வரை அங்குப் பணியாற்றியபோது பல விருதுகள் வாங்கியுள்ளார். பன்னாட்டு இதழ் ஒன்றில் இவருடைய கட்டுரையைப் படித்த INTEL நிறுவனத்தின் துணைத்தலைவர் ஒரு விழாவை ஏற்பாடு செய்து இவரை பாராட்டியதோடு, மேற்கொண்டு சட்டப்படிப்பு படித்து காப்புரிமை பிரிவில் நிபுணத்துவம் பெறுமாறு ஆலோசனை கூறினார். மேலும் இந்நிறுவனம் இவருடைய சட்டபடிப்புச் செலவை ஏற்றுக்கொண்டது.

Intel நிறுவனத்தில் முழுநேரம் பணிபுரிந்து கொண்டு, அதே நேரத்தில் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள மெக் ஜார்ஜ் சட்டப்பள்ளியில் சேர்ந்து பகுதி நேரப் படிப்பாக நான்கு

ஆண்டுகள் படித்தார். 120 பேர் கொண்ட வகுப்பில் இவர் ஒருவர் மட்டும் இந்தியர். கல்லூரியில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று J.D. (Judicial Doctorate) பட்டம் பெற்றார்.

பின்னர், கல்போர்னியா மாகாணத்தில் உள்ள புகழ் பெற்ற Perkinscoie என்ற சட்ட நிறுவனத்தில் Patent Attorney ஆக சேர்ந்து பணியாற்றினார் அமெரிக்க நாட்டின் தற்போதைய அதிபரான பாரக் ஒபாமா அவர்கள் இந்த நிறுவனத்தில்தான் வழக்கறிஞராக சில காலம் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. திரு. கிருபா தான் படித்த சட்டக்கல்லூரியிலேயே பகுதி நேரப் பேராசிரியராகவும் பணியாற்றி வருகிறார். சென்ற முறை சென்னைக்கு வந்தபோது கலைஞர் தொலைக்காட்சியில் 'சந்தித்த வேளையில்' நிகழ்ச்சியில் இவர் அளித்த பேட்டி பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர், மூத்த வழக்கறிஞர் இரா.காந்தி, தி.க.தலைவர் கே.வீரமணி மற்றும் வழக்கறிஞர்கள் பலராலும் பாராட்டப்பட்டது.


தமிழில் நல்ல புலமை பெற்றுள்ள இவர் விடுமுறை நாட்களில் தமிழர்களின் குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுத்தருகிறார், அங்குள்ள தமிழ்ச் சங்கத்தோடு இணைந்து தமிழ்ப்பணியும் புரிந்து வருகிறார்.

வாதத்திறமை, பங்கு கொண்ட வழக்குகளின் முடிவுகள், காப்புரிமை சட்டம் பற்றி பன்னாட்டு இதழ்களில் வெளியிடப்பட்ட கட்டுரைகள், வேலை செய்யும் நிறுவனம் மற்றும் வகிக்கும் பதவி, சட்டம் சம்பந்தமாக வகிக்கும் ஆசிரியர் போன்ற பிற பணிகள், மாகாணத் தகுதித் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்கள் போன்றவைகளின் அடிப்படையில் Super Lawyer - Rising Star என்ற உயரிய விருது கலிபோர்னியா மாகாணத்தில் பணி புரியும் வழக்கறிஞர்களில் இரண்டு சதவீதம் பேர்களுக்கு மட்டும் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இந்த விருதை 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து பெற்று சாதனை படைத்துள்ளார். இந்தியாவிலிருந்து அமெரிக்கா சென்று பணியாற்றிய வழக்கறிஞர்களில் இந்த விருதைப் பெற்றவர்கள் மிகச்சிலரே என்பதும், தமிழகத்தில் இருந்து இந்த விருதைப் பெற்றவர் இவர் மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது உலகப்புகழ்பெற்ற 'Amazon' நிறுவனத்தின் சட்டப்பிரிவில் Patent Counsel ஆகப் பொறுப்பேற்று சிறந்த வழக்கறிஞராகப் பணியாற்றி வருகிறார்.

Intellectual Property Rights, Copy Right, Patent Rights, காப்புரிமை சட்டம் போன்றவை உலக அளவில் தற்போது முக்கியத்துவம் பெற்று வருகின்றன. இந்தத் துறையில் சிறந்த நிபுணத்துவம் பெற்று, அமெரிக்க கலிபோர்னியா மாகாணத்தில் Super Lawyer - Rising Star விருதை இருமுறை பெற்று கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள திரு.கிருபா புஷ்பராஜ் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது அளித்து பாராட்டி வாழ்த்துகிறது.

# கொங்கு சாதனையாளர்



**ஆர்.இராமச்சந்திரன்**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அருகில் வெங்கடத்தாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவரும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்க முன்னாள் செயற்குழு உறுப்பினரும், கிருஷ்ணகிரி மாவட்ட கொங்கு நண்பர்கள் சங்கத் தலைவருமான திரு.பி.இராமசாமி – திருமதி கமலம் ஆகியோரின் மகனாக **1986** ஆம் ஆண்டு பிறந்தவர் திரு. ஆர். இராமச்சந்திரன்

பள்ளிப் படிப்பை ஊத்தங்கரை ஸ்ரீ வித்யா மந்திர் உயர்நிலைப்பள்ளியிலும், பி.எஸ்ஸி பட்டப்படிப்பை சென்னை லயோலா கல்லூரியிலும், பி.எல்.பட்டப்படிப்பை சென்னை அம்பேத்கர் சட்டக்கல்லூரியிலும் படித்தார். பி.எஸ்ஸி தேர்வில் மாநில அளவில் முதல் மாணவராகத் தேர்வு பெற்று தங்கப்பதக்கம் பெற்றார் என்பதும், பி.எல் நுழைவுத்தேர்வில் மாநிலத்தில் முதல் இடம் பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

IAS அலுவலராகத் தேர்வு பெற்று, நாட்டுக்குச் சேவையாற்றிட வேண்டும் என்ற உன்னத லட்சியத்துடன் IAS தேர்வுக்காக கடினமாக உழைத்தார். நான்கு முறை வெற்றி கிடைக்கவில்லை. ஆனாலும் தொடர்ந்து மீண்டும் தேர்வு எழுதினார்.

**04–05–2012** அன்று வெளியான ஐ.ஏ.எஸ்.தேர்வு முடிவுகளின்படி தமிழக அளவில் ஐந்தாவது இடத்தையும், அகில இந்திய அளவில் **115** வது இடத்தையும் பிடித்து சாதனை படைத்துள்ளார், திரு.ஆர்.இராமச்சந்திரன்

ஐந்தாவது முறையாக இந்திய குடிமைப்பணித் தேர்வு எழுதியபோதுதான் இவர் இந்தச் சாதனையை செய்து முடித்துள்ளார். முயன்றால் முடியாதது எதுவுமில்லை, முயற்சிதன் மெய்வருத்தக்கூலி தரும், முயற்சி திருவினையாக்கும் ஆகிய பழமொழிகளை

மெய்ப்பிப்பதுபோல் இவருடைய வெற்றி அமைந்துள்ளது.

தன்னம்பிக்கை, விடா முயற்சி, அயரா உழைப்பு, திறமை ஆகியவற்றால் IAS தேர்வில் வெற்றி பெற்றுள்ளார். IAS தேர்வு எழுதும் இளைஞர்களுக்கு இவர் ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறார் என்றால் அது மிகையல்ல.

கிராமத்தில் உள்ள மாணவ மாணவியருக்கு IAS போன்ற கல்வி பயில வழிகாட்டுதல், மனித நேயத்துடன் மக்களுக்கு சேவை செய்தல், உயர்கல்விக்காக அமெரிக்கா சென்று Harward University ல் MBA படித்து உயர்ந்த பதவியில் அமர்ந்து இந்திய நாட்டுக்கு சேவை செய்தல், பெற்றோரைப் பேணிக்காத்தல் ஆகியவற்றை விருப்பமாகத் தெரிவித்துள்ளார், திரு. இராமச்சந்திரன்.

தேர்வு முடிவுகள் வெளிவந்த பின்னர், தன் தந்தை திரு. பி.இராமசாமி அவர்களுடன் வெள்ளிவிழா இல்லத்திற்கு ஜீலை மாதம் வருகை புரிந்த திரு. ஆர். இராமச்சந்திரன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்க நிர்வாகிகளும் செயற்குழு உறுப்பினர்களும் வாழ்த்து தெரிவித்தனர்.செய்திமடலிலும் இவருக்கு சங்கத்தின் சார்பில் பாராட்டும், வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

இவருடைய வெற்றிக்கு மாவட்ட துணை ஆட்சியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள தந்தை திரு. பி.இராமசாமி அவர்களும், தாயார் திருமதி கமலம் அவர்களும் அளித்த ஊக்கமும், உற்சாகமும் ஒரு காரணமாகும்.

IAS தேர்வில் இந்திய அளவில் 115 ஆம் இடமும் தமிழக அளவில் 5 ஆம் இடமும் பெற்று சாதனை படைத்துள்ள திரு. ஆர்.இராமச்சந்திரன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டி வாழ்த்துகிறது.

# வெளிநாட்டு கொங்கு சாதனையாளர்



## திரு. தூரன் கருணாகரன் இராமசாமி

மலேசிய நாட்டில் 1955 ஆம் ஆண்டு திரு. இராமசாமி – திருமதி பாப்பாயி தம்பதியரின் மகனாகப் பிறந்தவர் தூரன் கருணாகரன் இராமசாமி அவர்கள்.

மலேசியாவில் படிப்பை முடித்ததும், 1975 ஆம் ஆண்டு தன்னுடைய 20ஆவது வயதிலேயே மலாய் மற்றும் ஆங்கில மொழியில் புலமையும் தனித்திறமையும் பெற்று ஆசிரியராகப் பணியைத் தொடங்கினார். 1995 ஆம் ஆண்டுவரை, தொடர்ந்து 20 ஆண்டுகள் ஆசிரியராக மிகச் சிறப்பாகப் பணியாற்றிய பின்னர், அப்பணியிலிருந்து விலகினார். 1995 ஆம் ஆண்டு சிவில் இன்சினியரிங் படிப்பு முடித்து, சொந்தமாக கட்டுமானத் தொழில் நிறுவனத்தைத் தொடங்கினார்.

சமுதாயப்பற்று மிகுந்த இவர் பொதுவாழ்வில் ஈடுபட்டு சமுதாயச் சேவையும் சமூக சேவையும் பலரும் பாராட்டும் வண்ணம் ஆற்றி வருகிறார். சேலயாங் பன்னாட்டு ரோட்டரி சங்கத்தின் (Rotary Club International, Selayang) பொருளாளராகப் பொறுப்பேற்று சேவையாற்றி வருகிறார்.

புகிட் மலுரி குடியிருப்போர் சங்கத்தின் பொருளாளராகவும், கோலாலம்பூர் சாரணர் கூட்டமைப்பின் மாநிலத் துணை ஆணையராகவும், தீயணைப்புப் படையில் தன்னார்வ சேவையாற்றும் குழுவில் உறுப்பினராகவும், கெப்பாங் மாரியம்மன் தேவஸ்தானத்தின் கமிட்டி உறுப்பினராகவும், மலேசியா பார்வையற்றோர் சங்கத்தின் கமிட்டி உறுப்பினராகவும், மலேசியா ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் சங்கத்தின் கமிட்டி உறுப்பினராகவும் பொறுப்புகள் ஏற்று சிறப்பாகப் பணியாற்றி சேவை செய்து வருகிறார்.

2008 ஆம் ஆண்டு முதல் தற்போதுவரை மலேசியா நாமக்கல் நல அபிவிருத்தி மன்றத்தின் தலைவராகப் பொறுப்பேற்று மலேசியாவில் வசிக்கும் கொங்குச் சமுதாய மக்களின் மேம்பாட்டிற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் அரும்பாடுபட்டு வருகிறார்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கும், மலேசியா நாமக்கல் நல அபிவிருத்தி மன்றத்திற்கும் நெருங்கிய நல்லுறவு உள்ளது. சங்கத்தின் சாதனைகளுள் ஒன்றான தீரன் சின்னமலை மாளிகைக்கு ரூபாய் ஒரு இலட்சத்தை இவருடைய தலைமையில் செயல்பட்டு வரும் மன்றம் நன்கொடையாக அளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மலேசியாவில் நடைபெறும் மன்றத்தின் ஆண்டு விழாக்களில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சார்பில் சிறப்பு அழைப்பாளராக ஓரிருவர் கலந்துகொள்வது இரண்டு அமைப்புகளுக்கும் உள்ள நல்லுறவை மேலும் வளர்ப்பதாக உள்ளது கொங்குச் சமுதாய முன்னேற்றத்திற்கும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சிக்கும் அரும்பணியாற்றிவரும் சங்கத் தலைவர் பரணி கே.பாலசுப்பிரமணி அவர்களுக்கு கடந்த மாதம் மலேசியா மன்றம், ‘பெருந்தலைவர்’ விருது அளித்து கௌரவித்தது.

திரு.கருணாகரன் ஒரு சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்தவர். வாலிபால் மற்றும் கால்பந்து விளயாட்டு வீரராகத் திகழ்ந்தவர். விளையாட்டு நிகழ்ச்சிகளிலும், விளையாட்டு விழாக்களிலும் கலந்துகொண்டு சிறப்பித்து வருகிறார். Hash Walk குழுவின் உறுப்பினராகவும் உள்ளார்.

பஹாங் மாகாண சுல்தானே அவர்களிடமிருந்து PJK என்ற கௌரவ விருதைப் பெற்றவர். மலேசிய சாரணர் சங்கங்கள் கூட்டமைப்பின் கௌரவ விருதையும் பெற்றுள்ளார். இவருடைய மனைவி திருமதி சேரன் இராஜ சௌந்தரி மலேசியாவில் ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறார். கணவருடைய சமுதாயப்பணிக்கும், சமூக சேவைக்கும் ஊக்கமளித்து வருகிறார். மூத்த மகள் செல்வி கலைவாணி பட்டம் பெற்ற கணக்காளர். தற்போது ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறார். இளைய மகள் செல்வி கலைமணி தொலைத் தொடர்பு பொறியியல் பட்டம் பெற்ற பொறியளார். மகன் கலைகணேஷ் திரவ அனல் பொறியியல் பட்டம் பெற்றவர். தற்போது கடல் துணை ஆய்வுப் பொறியாளராகப் பணியாற்றி வருகிறார்.

மலேசிய நாட்டில் மிகச்சிறந்த வகையில் சமுதாயப்பணியும், மனிதநேய சமூக சேவையும் ஆற்றி, கொங்கு வேளாளர் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள மலேசியா நாமக்கல் நல அபிவிருத்தி மன்றத்தலைவர் திரு. தூரன் கருணாகரன் இராமசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘வெளிநாட்டு கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு வேளாண் சாதனையாளர்



## திரு. கே.வி.துரைசாமி

ஈரோடு மாவட்டம் சிவகிரி அருகில் வாழைத்தோட்டம் காரவலசு என்ற ஊரை சேர்ந்த திரு.பெ.பெரியசாமிக் கவுண்டர் அவர்களின் மகனாக 1943 ஆம் ஆண்டு பிறந்தவர்.


இவர் விவசாயத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். இயற்கையுடன் கூடிய நவீன விவசாயத்தை 1965 ஆம் ஆண்டு முதலே செயல்படுத்தி வருகிறார். நெல் விளைவிப்பதில் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்து மாநில அளவில் 1968, 69, 70 ஆம் ஆண்டுகளில் முதல் பரிசும், 1967 ஆம் ஆண்டில் தமிழக முதல்வர் விருதும் பெற்றுள்ளார். 1971 ஆம் ஆண்டு தமிழக ஆளுநர் அவர்களிடம் 'வேளாண்மைச் செம்மல்' விருது பெற்றுள்ளார்.

தேசிய அளவில் பயிர் விளைச்சல் போட்டியில் மூன்றாவது இடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளார். வேளாண்மைத் துறையில் நவீன தொழில் நுட்பங்களைக் கடைபிடித்து ஏக்கருக்கு 5,379 கிலோ அளவு நெல் விளைவித்துள்ளார்.

இவருடைய மனைவி திருமதி தனலட்சுமி. மகள் திருமதி எம்.புவனேஸ்வரி, கணவர் திரு. முருகானந்தம் அவர்களுடன் கரூரில் வசித்து வருகிறார். மகன் திரு.சிவகணேஷ், மருமகள் திருமதி சுதாவுடன் அமெரிக்காவில் வசித்து வருகிறார்.

நெல் விளைச்சலில் சாதனை படைத்துள்ள திரு.கே.பி.துரைசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு வேளாண் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு வேளாண் சாதனையாளர்



## திரு. மது (எ) டி.இராமகிருஷ்ணன்

கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி வட்டத்தில் கோட்டூர் மலையாண்டிப்பட்டணம் என்னும் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஏ.துரைசாமிக் கவுண்டர் அவர்களின் மகனாக 1947 ஆம் ஆண்டு பிறந்தவர். B.E., M.Sc., (Engg) பட்டங்களைப் பெற்ற இவர் கடந்த 35 ஆண்டுகளாக நவீன முறையில் இயற்கை விவசாயம் செய்து வருகிறார்.

1997 ஆம் ஆண்டு முதல் 50 ஏக்கர் நிலத்தில் இயற்கை விவசாயம் செய்து வருகிறார். இயற்கை வேளாண்மையின் தந்தை திரு.புஃகோகா (ஜப்பான்) அவர்களிடம் நேரடியாக டேராடூனில் பயிற்சி பெற்றார். 2010 ஆம் ஆண்டு கோவையில் நடந்த உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டில் 'இணையதளத்தில் இணையும் இயற்கை வேளாண்மை' என்ற தலைப்பில் கட்டுரையைச் சமர்ப்பித்தவர். வானொலி, தொலைகாட்சி இரண்டிலும் இயற்கை வேளாண்மை பற்றி பலமுறை விரிவான விளக்கம் தந்துள்ள இவர், 50க்கும் மேற்பட்ட விவசாயம் பற்றிய கட்டுரைகள் எழுதியுள்ளார்.

"Outstanding Agriculture Engg Award 2005" என்ற விருதை Institution of Engineers (India) அமைப்பில்இருந்தும், Long Service Award என்ற விருதை சங்கரா கண் மையத்தில் இருந்தும், 'வேளாண்மைச் செம்மல்' என்ற விருதை தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகத்தில் இருந்தும் பெற்ற சிறப்புக்குரியவர்.

இவருடைய மனைவி திருமதி பானுமதி. மகன் சந்தோஷ் B.E., MBA., – மருமகள் கோகுலமீனா. மகள் சண்முகப்பிரியா – மருமகன் பார்த்திபன்.

இயற்கை வேளாண்மையில் சாதனை படைத்துள்ள மது (எ) டி.இராமகிருஷ்ணன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு வேளாண் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு வேளாண் சாதனையாளர்



## திரு. எஸ்.உமாபதி

திருப்பூர் மாவட்டம் வெங்கிட்டாபுரம் அருகில் உள்ள நாசுவம்பாளையம் என்ற கிராமத்தில் திரு.சி.சிவசுப்பிரமணி கவுண்டர் அவர்களின் மகனாக 1961 ஆம் ஆண்டு பிறந்தார்.

கோபிசெட்டிபாளையம் கலைக்கல்லூரியில் பி.ஏ.பட்டம் பெற்ற இவர் கோழிப்பண்ணைத் தொழிலைத் தொடங்கினார். 1983 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 1000 முட்டைக் கோழிகளை வளர்த்து வந்தார். இவருடைய கோழிப்பண்ணையில் உற்பத்தியான முட்டைக்கு நல்ல வரவேற்பு இருந்தது. நவீன தொழில் நுட்பங்களைக் புகுத்தி, தற்சமயம் ஒரு லட்சம் முட்டைக் கோழிகளை வளர்த்து வருகிறார். உமாபதி பவுல்டரி ஃபார்ம் என்ற இவரது நிறுவனம் கோழி முட்டை சந்தையில் 30 ஆண்டுகளாக சிறப்பான பங்கு வகித்து வருகிறது.

இவரது தோட்டத்தில் ‘கங்கா பாண்டம்’ எனும் 12 ஆண்டு குட்டை ரக 600 தென்னை மரங்கள் உள்ளன. இவை பெண் மரங்களாகவும், மேற்கு கடற்கரை நெட்டையை ஆண் மரங்களாகவும் பாவித்து இரண்டையும் சேர்த்துக் கலப்பினமாக உருவாக்கி ‘ராம் கங்கா’ என அதற்குப் பெயரிட்டு ‘உமாபதி வீரிய ஒட்டு தென்னை நாற்றுப் பண்ணை’ என்னும் நிறுவனத்தை உருவாக்கி நடத்தி வருகிறார். 50 ஏக்கரில் வீரிய ஒட்டு நாற்றுகளை உற்பத்தி செய்து வருகிறார். ராம் கங்கா தென்னை மரங்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் காய்ப்பு வந்து நன்றாக உள்ளன.

இவருடைய மனைவி திருமதி விமலா தேவி பி.எஸ்சி. பட்டம் பெற்றவர். இத்தம்பதியருக்கு N.V.ராம் மோகன் (B.E., இறுதியாண்டு), N.V.ராம்பிரசாத் (B.Com., முதலாண்டு) என இரண்டு மகன்கள் உள்ளனர். கோழி முட்டை உற்பத்தியிலும், தென்னை மர வளர்ப்பிலும் சாதனை புரிந்துள்ள திரு.எஸ்.உமாபதி, அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு வேளாண் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்




## செல்வன் கே.எம்.சித்தார்த்

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூரைச் சேர்ந்த இந்திரா மருத்துவமனை டாக்டர் கே.முத்துகுமார் – டாக்டர் (திருமதி) இந்திரா தம்பதியரின் மகன் கே.எம்.சித்தார்த். 1994 ஆம் ஆண்டு பிறந்த இவர், சென்னை ஸ்ரீபெரும்புதூரில் உள்ள மகரிஷி இண்டர்நேஷனல் உறைவிடப் பள்ளியில் இந்த ஆண்டு பன்னிரண்டாம் வகுப்பு முடித்து IIT, JEE நுழைவுத் தேர்வில் அகில இந்திய அளவில் 28வது இடமும், தமிழக அளவில் 5வது இடமும் பெற்று மேதகு தமிழக ஆளுநர் அவர்களிடம் நேரில் பாராட்டுப் பெற்றுள்ளார்.

தற்போது டெல்லி IIT, யில் B,Tech (Computer Course) முதலாண்டு படித்து வருகிறார். இவர் பல அகில இந்தியத் தேர்வுகளிலும், விளையாட்டுப்போட்டிகளிலும் கலந்துகொண்டு பரிசுகள் பெற்றுள்ளார். மேலும் தேசிய அளவில் யோகா தேர்வில் கலந்து கொண்டு 'பாலயோகமணி' பட்டம் பெற்றவர். இவருடைய தந்தை டாக்டர் கே.முத்துகுமார் 1984 ஆம் ஆண்டு +2 தேர்வில் 1103 மதிப்பெண்கள் பெற்று நமது சங்கத்தின் முதல் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

IIT நுழைவுத்தேர்வில் சிறப்பிடம் பெற்றதோடு பல்வேறு போட்டிகளிலும் பரிசுகள் பல பெற்று சாதனை படைத்துள்ள செல்வன் கே.எம்.சித்தார்த் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வன் பி.மனோஜ்

கர்நாடகா மாநிலம் சித்ரதுர்கா மாவட்டம், இரியூர் வட்டம் அடிவள அருகில் பட்றேஹள்ளி என்ற ஊரைச் சேர்ந்த திரு.பாலசுப்பிரமணியன் அவர்களின் மகன் செல்வன் பி.மனோஜ். கராத்தேவில் சாதனை படைத்துள்ளார்.

12வது நிரம்பிய இவர் இந்தியா மற்றும் மலேசியாவில் நடைபெற்ற கராத்தே போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளைப் பெற்றுள்ளார்.

All India Invitation Karate Champinship 2011" ,'1st Interstate Open Karate-Do Championship 2012 முதலான போட்டிகளில் கலந்துகொண்டு விருதுகளைப் பெற்றுள்ளார்.

Science Talent Examination (11t International Level) ல் தன்னுடைய 5,8,9, வது வயதுகளிலேயே முதல் இடம் பிடித்து நமது இனத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

படிப்பிலும் மிகச்சிறந்து விளங்குகிறார். அறிவிலும், விளையாட்டிலும் மிகச்சிறந்து விளங்கும் இவர் தன்னம்பிக்கை, விடா முயற்சி, கடும் பயிற்சி ஆகியவை காரணமாக இந்தச் சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

கராத்தே போட்டிகளில் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள செல்வன் பி.மனோஜ் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பழைய நினைவுகள்

– மூத்தவழக்கறிஞர் **இரா.காந்தி**

**1961** ஆம் ஆண்டு மும்பையில் பயின்று சென்னை திரும்பினேன். அந்த ஆண்டுதான் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. பேராசிரியர் அ.பழனிசாமி துணைத்தலைவராகவும், கோவை செழியன் பொருளாளராகவும், கே.எம்.சென்னியப்பன் செயலாளராகவும் இருந்தனர். சுப்பையன், மீசை ப.பெருமாள், க.தேவணன், கே.ஆர்.மாரப்பன், எம்.சி.சோமசுந்தரம், இரா.காந்தி, டி.பி.சதாசிவம் மற்றும் சிலரும் சேர்ந்து தொடங்கினர்.

இதன் அவசியம் என்னவென்றால் **1960**ஆம் ஆண்டு சென்னை தலைமைச் செயலகத்தில் பணி செய்த ஒருவரின் குழந்தை அம்மை நோயால் இறந்துவிட்டது. அருகிலிருந்த வீட்டார் யாரும் பயந்து கொண்டு உதவிக்கு வரவில்லை நோய் தொற்றிக் கொள்ளும் என்று அருகில் தெரிந்த, பழகிய குடும்பங்கள் கூட வர பயந்தார்கள். இதைக் கேள்விப்பட்டு கொங்கு இன மக்கள் சிலர் கூடினார்கள். அக்கா கருணாம்பிகை, அவரது கணவர் எம்.சி.சோமசுந்தரம், கேப்டன் பழனிசாமி, பேராசிரியர் அ.பழனிசாமி, கோவை செழியயன், கே.எம்.சென்னியப்பன் முதலானோர் கூடினார்கள். நானும் அவர்களுடன் இருந்தேன்.

வேதனையைப் பகிர்ந்துகொள்ள, தோளில் சாய்ந்து தேம்பி அழுதிட, நமக்கு உதவிட சிலர் வேண்டும் என்று எண்ணினோம். அதனால் தோன்றியதுதான் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம். அப்போது சென்னையில் இருந்த கொங்குச் சமுதாய மக்களில் பலர் அரசு ஊழியர்களாக இருந்தனர். கவுண்டர் சங்கம் என்றால் அரசு நடவடிக்கை எடுக்கும். எனவே கொங்கு நண்பர்கள் சங்கம் என்று நீண்ட விவாதத்திற்குப் பின் சங்கத்திற்குப் பெயர் வைத்தனர்.

திருவல்லிக்கேணி பெரிய தெருவில் இருந்த பார்த்தசாரதி டுடோரியல் கல்லூரி நமது இன நண்பர் திரு.மாரப்பன் அவர்களால் நடத்தப்பட்டு வந்தது. **10, 20** பேர் கூட வசதியான

இடம்தான். மாரப்பன் அவர்களே முன்வந்து இடம்தர சம்மதித்தார். ஒவ்வொரு மாதமும் ஞாயிறன்று 10 மணிக்குக் கூடுவோம். நமது சமுதாயம் பற்றி விவாதிப்பேம்.

சில சட்ட திட்டங்கள் தீட்டப்பட்டன. வருட சந்தா ரூ. 5 அல்லது ரூ 10 என்று இருந்தது. வருடம் ஒருமுறை இராயப்பேட்டை பழைய உட்லாண்ட்ஸ் ஹோட்டலில் ஆண்டுவிழா நடக்கும். விழா முடிவில் ஹோட்டலுக்குக் கட்ட வேண்டிட பணம் குறையும். ரூ. ஐந்து அல்லது ரூ பத்து என ஒவ்வொருவரும் போட்டுக்கொள்வோம். எப்போதும் பணம் பற்றாக்குறைதான். தற்போதுபோல் தொழில் முனைவோர் இல்லை. 1980 ஆம் ஆண்டுக்கு மேல்தான் நம்மவர்கள் தொழில் தொடங்கினார்கள். திரு.கே.எம்.சென்னியப்பன் கணக்கைத் துல்லியமாக வைத்திருப்பார். ஒரு பைசா கூட குறையாது.

சில ஆண்டுகளுக்குப் பின்னர், பட்டக்காரர் சேனாபதி அவர்களின் மயிலை தெற்கு மாடவீதியில் உள்ள வீட்டில் சங்கக் கூட்டங்கள் நடந்தன. அப்போது சங்கத்திற்குச் சிறிது பணம் சேர்த்தோம். அதை வட்டிக்குவிட்டு சிறு தொகை பெற்றோம். அப்போது இருந்த செயலாளர் டாக்டர் கே.கே.இலட்சுமணன் சில சொந்தங்களுக்கு வட்டிக்குப்பணம் கொடுத்து வட்டியையும் முதலையும் இழந்தோம்.

அருட்செல்வர் மகாலிங்கம் அவர்களை அணுகி தலைவர் பொறுப்பை ஏற்கச் செய்தோம். அவருக்குப் பின்னர் அமரர் முத்துசாமி ஐஏஎஸ், கே.பொன்னுசாமி, பேராசிரியர் டாக்டர் எம்.ஏ., வேலுசாமி, இரா.காந்தி, கே.பழனியப்பன் முதலானோர் தலைவர் பொறுப்பை ஏற்றனர். இருந்தும் பணக் கஷ்டம்தான். பின்னர் பாம்குரோவ் ஹோட்டலில் நமது சங்க ஆண்டு விழா கூட்டங்கள் நடைபெற்றன. புதிதாகத் திருமணம் புரிந்தோர். பதவி உயர்வு பெற்றவர்கள் ஆகியோரைப் பாராட்டுவதுதான் நமது சங்க நிகழ்ச்சியாக இருக்கும்.

அதற்குப் பின்னர் தொழில் முனைவோர் பலர் நமது சங்கத்தில் சேர்ந்தார்கள். அவர்கள் முயற்சியால் கட்டடங்கள் வாங்கப்பட்டன.

# கொங்கு நண்பர்கள் சங்கம் நம் மக்களின் உறவுப்பாலம்

– திரையுலக மார்கண்டேயர் சிவகுமார்

பிறந்த ஊரைவிட்டு, சுவாசித்த காற்றை விட்டு, குடித்த தண்ணீரை விட்டு, வாழ்ந்த வீட்டை விட்டு, பெற்றவளையும், உடன்பிறந்தவளையும் விட்டு 1958ல் உருப்பட்டே தீர வேண்டும் என்ற வெறியில் சென்னை வந்தேன்.

பல்வேறு சாதியினர், பல்வேறு மொழியினர் – பல்வேறு பழக்க வழக்கங்களுடன் வாழ்ந்த சென்னையில் கால்பதித்தபோது, அனைத்தும் அன்னியமாகத் தெரிந்தது. ஓர் அனாதை போல் உணர்ந்தேன். எனக்குப் பிடித்தது எதுவும் இங்கில்லை. என்னைத் தெரிந்தவர் யாரும் இங்கில்லை. இங்கிருப்பவர்களை நேசிக்கத் தொடங்கினேன். இங்கு கிடைத்ததைப் புசிக்கத் தொடங்கினேன்.

கொங்குநாடு, கொங்கு மக்கள் என்ற எந்த அடையாளமும் சென்னையில் அப்போது இல்லை. பெரியவர் சி.சுப்பிரமணியம் காமராஜர் மந்திரி சபையில் இருந்தார். விவசாய மந்திரியாக பழையகோட்டை பட்டக்காரர் மன்றாடியார் இருந்தார். பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் சென்னையிலும் இருப்பார். சொந்த ஊரிலும் இருப்பார். இவர்கள் யாரையும் நான் பார்த்ததில்லை. பார்க்க முடியவில்லை. கொங்கு வேளாளக்கவுண்டர்கள், சென்னை மொத்தத்திலும், அந்த நாட்களில் பத்து, இருபது பேர் நிரந்தரமாகக் குடியிருந்தால் ஆச்சர்யம். அவர்கள் யார், அவர்களை எப்படித் தொடர்பு கொள்வது எதுவும் தெரியாது. அவர்களைத் தெரிந்தாலும் நட்பு, உறவு பாராட்ட வாய்ப்பு இல்லை.

இப்படிப்பட்ட காலகட்டத்தில் தலைமைச்செயலகத்தில் பணிபுரியும் கொங்குச் சொந்தங்கள் இந்த அபூர்வ அமைப்பை உருவாக்கி மெல்லமெல்ல நட்பை, உறவை இறுக்கமாக்கினார்கள். கொங்குச் சொந்தம் ஒருவன் வீட்டில், உயிர் இழப்பு நேர்ந்தால், முன்போல் தவிக்க வேண்டியதில்லை. ஒரு போன் செய்தால் எந்த மூலையில்

இருந்தாலும்அந்தச்சொந்தம் ஓடி வந்து உதவிக்கரம் நீட்டும். இன்பம், துன்பம் இரண்டின்போதும் ஆதரவுக்கரம் நீட்டும். கொங்குச்சொந்தங்கள் இணைந்த இச்சங்கம் படிப்படியாக வளர்ச்சி பெற்று, இன்று கொங்குமண்ணில் இருந்து சென்னைக்குப் படிக்க வரும் பெண் குழந்தைகள் தங்க ஓர் இல்லமும், ஆண்பிள்ளைகள் தங்கிப்படிக்க ஓர் இல்லமும் வியாபார சம்பந்தமாக வருவோர் குறைந்த வாடகையில் தங்கிச்செல்ல ஓர் இல்லமும் என ஆரோக்கியமான வளர்ச்சியை இந்தக் கொங்கு நண்பர்கள் சங்கம் இந்த 50 ஆண்டுகளில் கண்டிருக்கிறது. பல்துறைச் சாதனையாளர்களை அழைத்துப் பாராட்டிப் பரிசும் அளிக்கிறது.

இதுவரை எந்த வித அரசியல் சாயமும் இல்லாமல் – பெரியவர் சிறியவர் வேறுபாடுஇல்லாமல்–தலைவன் தொண்டன் பாகுபாடில்லாமல் கொங்குமண்ணில் ஒரு விசேஷத்தில் சந்திக்கும்போது அனைவரும் எப்படி சந்தோஷமாக அளவளாவுகிறோமோ, அதுபோல உணர்வை இந்த அமைப்பினரைச் சந்திக்கும் ஒவ்வொரு தடவையும், நான் மனப்பூர்வமாக உணர்கிறேன்.

பரணி பாலு போன்ற சமூதாயத்திற்காக தன்னை அர்ப்பணிக்கும் உணர்வுள்ள இளைஞர்கள் நம் சொந்தங்களிலிருந்து நிறையபேர் உருவாக வேண்டும். தானும் வாழ்ந்து, தன்னைச் சுற்றியுள்ள சமுதாயத்தையும் மேம்படுத்த உழைக்கும் எண்ணத்தை நாம் எல்லோரும் வளர்த்துக்கொள்ளவேண்டும்.

சாதி உணர்வு தவறில்லை – சாதி வெறிவேண்டாம். இந்தியன் என்று சொல்வது பெருமைக்குரிய விஷயம். தமிழன் என்று சொல்வது மகிழ்ச்சிக்குரிய விஷயம், கொங்குத்தமிழன் என்று சொல்லிக் கொள்வது இன்னும் மகிழ்ச்சி தரும் விஷயம்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 100 ஆண்டுகளைக் கடந்து நம்மக்களின் உறவுக்குப் பாலமாக பணி செய்ய வாழ்த்துகிறேன்.

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

- **கே.ஆர்.அப்பாவு,** முன்னாள் தலைவர்

**1978 ம் ஆண்டு முதல் சங்கத்தின் நடவடிக்கைகள்**

1978ம் ஆண்டு 10, அம்மையப்பன் தெரு கட்டிடம் சங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு வந்தது. தலைவர் மறைந்த முத்துசாமி IAS. கே.ஆர்.அப்பாவு – துணைத்தலைவர். கட்டிடத்தின் மின் இணைப்பு மற்றும் குடிநீர் தொடர்பினைத் துண்டித்து, வாடகைக்கு இருந்தவர்கள் எடுத்துச் சென்றுவிட்டனர். பலருடைய நன்கொடையால் செப்பனிடப்பட்டு, மாணவர்கள் தங்க வைக்கப்பட்டார்கள். மாதாந்திரக் கூட்டம் சங்கக் கட்டிடத்தில் மாதந்தோறும் தவறாமல் நடந்து வந்தது.

அதன்பின் பேராசிரியர் டாக்டர் எம்.ஏ.வேலுசாமி தலைவர். கே.ஆர்.அப்பாவு துணைத்தலைவர். கல்லூரியில் ஏற்பட்ட குழப்பத்தால் தலைவர் பதவியை டாக்டர் எம்.ஏ.வேலுசாமி ராஜினாமா செய்துவிட்டார். துணைத்தலைவர் பொறுப்பில் சங்கம் நடந்தது. அடுத்த தேர்தலில் திரு. கே.பொன்னுசாமி தலைவரானார். அவரது காலத்தில் கட்டிடம் இடிக்கப்பட்டு, புதிய கட்டிடம் கட்டத் தீர்மானிக்கப்பட்டு, இடிக்கப்பட்டது. சரியான முயற்சி இன்மையால் கட்டிடம் கட்டப்படவில்லை. அதன் பின் திரு. அருணாசலம் – தலைவர். ராஜ்பார்க் ஓனர் திரு. பி.தேவராஜன் – உபதலைவர். கட்டிடம் கட்டித்தர முயற்சி எடுக்கப்பட்டு கட்டிடத்தின் கட்டும் பணியை தேவராஜன், கே.ஆர்.அப்பாவு ஆகியோர் பொறுப்பில் விடப்பட்டு, கட்டடப் பணி ஆரம்பிக்கப்பட்டது.

பி.தேவராஜன் மேற்பார்வையிலும், அப்பாவுவின் பணம் பட்டுவாடாவிலும் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. அடுத்து பி.தேவராசன் தலைவரானார். கே.பாலசுப்பிரமணியம் – காரியதரிசி. கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்தை நடத்தும் பொறுப்பு கே.ஆர்.அப்பாவுவிடம் கொடுக்கப்பட்டு 4 ஆண்டுகள் நிர்வகிக்கப்பட்டது. அடுத்து கே.ஆர்.அப்பாவு – தலைவர். கே.சி.காளியண்ணன் காரியதரிசி. கே.ஆர்.அப்பாவு தலைவராக இருந்த காலத்தில் நமது வெள்ளிவிழா இல்ல நிலம்

வாங்கப்பட்டது. பெரும் முயற்சியில் குடியிருந்தவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். இந்தக் கால கட்டத்தில் சங்கத்தில் பொருளாதார நிலை சரியில்லாததால் REPCO -இல் பேங்க் கடன் வாங்கி வெள்ளி விழா இல்லம் நிலம் பதிவு செய்யப்பட்டது.

இது வரை சங்கத்தைக் கண்டு கொள்ளாதவர்கள் உள்ளே வந்தனர். வெளியூரில் தங்களுக்குச் சாதகமானவர்களை உறுப்பினர்கள் ஆக்கினர். அடுத்து நடந்த தேர்தலில் வெளியூர் உறுப்பினர்களின் உதவியுடன் திரு. நல்லகோவிந்தசாமி தலைவரானார். அவர் அரசியலுக்குச் சென்றதால், அவர் நீக்கப்பட்டு. கே.சி.காளியண்ணன் தலைவரானார். இவருடைய காலகட்டத்தில் வெள்ளிவிழா இல்லம் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டது. வெள்ளிவிழா இல்லம் திறக்கப்பட்டவுடன் அம்மையப்பன் தெருவில் உள்ள கொங்கு இல்லம், பெண்கள் விடுதியாக மாற்றப்பட்டது.

சங்கத்தின் ஆரம்பகாலத்தில் பெருமுயற்சி எடுத்துக்கொண்வர்களுள் பொறியாளர் கே.எஸ்.கோவிந்தசாமி – மதிக்கப்படவேண்டியவர். பல ஊர்களுக்கு நேரில் சென்று பெரும் முயற்சியால் அம்மையப்பன் தெரு கட்டிடத்தை வாங்கினார். பொருள் இல்லாத காலத்தில், மனம் இருப்பவர்களும் தர முடியாத காலத்தில் தன் அரசுப் பணியில் தண்டிக்கப்பட்டு கொங்கு சங்கப் பணியை தியாக மனப்பான்மையுடன் செய்து கொடுத்தார்.

**சங்கம் வளர்ச்சி பெற்றகாலம் :–**

| | |
|---|---|
| 1. எஸ்.அருணாசலம் | தலைவர் |
| 2. பி.தேவராஜன் | தலைவர் |
| 3. கே.ஆர்.அப்பாவு | தலைவர் |
| 4. நல்லகோவிந்தசாமி | தலைவர் |
| 5. கே.சி.காளியண்ணன் | தலைவர் |
| 6. கே.பாலசுப்பிரமணியன் | தலைவர் |

பலரால், பெரும் முயற்சியால் வளர்ந்த இந்தச் சங்கத்தை, இனி வரும் தலைமுறை, நடுநிலை மாறாமல், ஜனநாயக முறைப்படி நடத்துவார்கள் என நம்புகிறேன்.

கொங்கு மாமணி புலவர் செ.இராசு ஈரோடு

# வாழிய சங்கம்

தங்கம் செய்யாததைச் சங்கம் செய்யும்
பங்கம் இல்லாத பழமொழி உண்மையே !

சீர்மிகு சென்னை வாழ் கொங்கர்சிலர் முயற்சியால்
ஓர்நாள் முளைத்தது உயர்இச் சங்கம்
ஆலம் விதையென அரும்பிய சங்கம்
ஆல விருட்சமாய் அகலம் கண்டது
விழுதுகள் பரப்பிடும் விந்தைச் செயல்போல்
பழுதிலா மூன்றாய்ப் பரந்திடும் கிளைகள்
வெள்ளி விழாவை வியப்புடன் எடுத்தது
நல்லதோர் பொன்விழா நாடியே வந்தது
குடும்ப விழாக்களைக் குதூகல மாகவே
நடத்திய சிறப்பை நாடே புகழ்ந்தது
விளையாட்டுப் போட்டியும் வியன்கலைப் போட்டியும்
விழைவுடன் சங்கம் வெற்றியாய் நடத்தின
மாமேதை விருதும் மாமணி விருதும்
சாதனை விருதும் சான்றோர்க்கு அளித்தது
வேளாண் சாதனை வியப்புறு இளையோர்
கொங்கு வள்ளல்கள் கொடையால் இயன்றது
முன்னாள் சங்கத்தை முயன்று வளர்த்தோர்
அன்னார் அனைவரின் அடிதொழு கின்றோம்
ஐம்பதாம் ஆண்டின் அணியுறு பொன்விழா
நம்முடைய நாளில் நடப்பது பெருமை
சந்திர சூரியர் சஞ்சரிக்கும் காலம்
இந்தநற் சங்கம் எழிலொடு வாழ்கவே
சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின்
உன்னதப் பொன்விழா வாழிய நன்றே !

தங்கம் செய்யாததைச் சங்கம் செய்யும்
பங்கம் இல்லாத பழமொழி உண்மையே !

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வரலாறு

– டி.கே.சுப்ரமணியன்
முன்னாள் செயலாளர்

அரசு அலுவல், கல்வி, தொழில்–வியாபாரம், தணியார் நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்ற சென்னையில் ஏராளமான கொங்கு வேளாளர்கள் குடியேறினர். சொந்தமாகத் தொழில் மற்றும் வியாபார நிறுவனங்களை சென்னையில் தொடங்கினர். 1960 வரை சென்னையில் கொங்கு வேளாளர்களுக்கென்று அமைப்பு கிடையாது. 1960ல் தலைமைச் செயலகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த கொளத்தூரைச் சேர்ந்த கே.பழனிசாமியின் குழந்தை அம்மை நோயால் காலமானபோது, இறுதிக் காரியங்களைச் செய்வதில் உதவிட அக்கம் பக்கத்தார் எவரும் உதவிட முன்வரவில்லை. மறுநாள் தலைமைச் செயலகத்தில் தன்னோடு பணியாற்றிய சில கொங்கு நண்பர்களின் உதவியோடும், ஊரிலிருந்து வந்திருந்த உறவினர்களின் உதவியோடும் குழந்தையின் இறுதிக்காரியங்களைச் செய்தனர். சில நாட்களில் மீண்டும் அதேபோல ஒரு துக்க நிகழ்ச்சி நடந்தது. தலைமைச் செயலகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த கொங்கு நண்பர்கள் அந்த வளாகத்தில் உள்ள தர்பார் ஓட்டலில் சந்தித்து தங்கள் வேதனைகளைப் பகிர்ந்துகொண்டு அடுத்து என்ன செய்யலாம் என்று ஆலோசித்தனர்.

நமக்கென்று ஓர் அமைப்பு தேவை என்று கருதினர். இதுபற்றி விவாதிக்க, தலைமைச்செயலக தர்பார் ஓட்டலில் ஒரு சந்திப்பிற்கு ஏற்பாடு செய்ததில் திரு.கே.எம். சென்னியப்பன் முன்னோடியாக இருந்து செயல்பட்டார். அவரோடு கோம்புபாளையம் கே.பி.சுப்பிரமணியன், திருப்பூர் பெருமாள்சாமி, கோவை சோமனூர் ஆர்.பொன்னுசாமி, கொளத்தூர் கே.பழனிசாமி, வி.என்.சீரங்கன், ஈரோடு கவுண்டம்பாளையம் கே.ஏ.சுப்ரமணியம், கே.ஏ.ஸ்ரீதேவியப்பன், கவுந்தபாடி சி.கே.ராமசாமி, கரூர் காக்காவாடி சி.ஈஸ்வரமூர்த்தி, உடுமலைப்பேட்டை, ஜி.சங்கரலிங்கம், மொடக்குறிச்சி டி.பி.சதாசிவம், சங்ககிரி கவுண்டனூர் பி.சண்முகம் போன்றவர்கள் இந்தச் சந்திப்புக்கு ஆர்வமுடன் வந்து பங்கேற்றார்கள்.

இந்தக் காலகட்டத்தில், 1962 ல் தைப் பொங்கல் நன்னாளில் மெரினா கடற்கரையில் கொங்கு நண்பர்கள் தங்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர். இந்தச் சந்திப்பிற்குப் பிறகு நண்பர்களிடையே உற்சாகமும், வேகமும் ஏற்பட்டது. நமது சமுதாய அமைப்பைப் பலப்படுத்த சென்னை நகரில் பல்வேறு பகுதிகளில் உள்ள கொங்கு நண்பர்களை சந்திக்கும் முயற்சியை மேற்கொண்டனர். சட்டக்கல்லூரி பேராசிரியர் அ.பழனிசாமி, கோவை செழியன், வழக்கறிஞர் இரா.காந்தி போன்றவர்களைச் சந்தித்தனர். நமது வசதிக்காக, சென்னையில் ஒரு சமுதாய அமைப்புத் தொடங்குவதென முடிவு செய்து அமைப்பின் பெயர், விதிமுறைகளை வகுப்பதற்காக பேராசிரியர் அ.பழனிசாமி, கே.எம். சென்னியப்பன், சி.கே.ராமசாமி ஆகியோரைக்கொண்ட குழு அமைக்கப்பட்டது.

ஆரம்பக்கட்டத்தில் அரசு அலுவலர்கள் மிகுதியாக இருந்தனர். ஆகவே அமைப்பின் பெயர் கொங்கு வேளாளர் சங்கம் என்று வைப்பதைவிட கொங்கு நண்பர்கள் சங்கம் என்று இருப்பதே நல்லது என்று பெரும்பாலோர் கருத்துத்தெரிவித்தபடி சென்னையில் கொங்கு நண்பர்கள் சங்கம் தொடங்கப்பட்டது. அரசியலுக்கு அப்பாற்பட்ட, தனிமனித ஆதிக்கமோ, குழுவின் ஆதிக்கமோ இல்லாத, ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் வழிகாட்டக் கூடிய வகையில் கொங்கு நண்பர்கள் சங்கத்தின் விதிமுறைகள் வகுக்கப்பட்டன. கே.ஆர்.மாரப்பன் என்பவர் திருவல்லிக்கேணியில் பி.டி.சி. டுடோரியல் காலேஜ் –ஐ நடத்திவந்தார். அவரை கே.எம்.சென்னியப்பன் மற்றும் சில நண்பர்கள் நேரில் சந்தித்து, கொங்கு நண்பர்கள் மாதம் ஒரு முறை ஒரு ஞாயிற்றுக்கிழமை சந்தித்துக்கொள்வதற்கு அவருடைய கல்விக்கூடத்தில் ஓர் இடத்தைக் கொடுத்து உதவும்படி கேட்டனர். திரு.மாரப்பன் மகிழ்ச்சியுடன் ஒப்புதல் தந்தார். அப்போதிலிருந்து மாதாமாதம் ஒரு ஞாயிறு காலை சந்தித்து ஒவ்வொருவரும் சுய அறிமுகம் செய்து கொள்வது, புதிய உறுப்பினர்களை அறிமுகம் செய்வது, சந்தா வசூலிப்பது மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்துப் பேசுவார்கள்.

கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கு, தலைவர் மற்றும் நிர்வாகக் குழு அமைக்க முயற்சி மேற்கொண்டனர். சமுதாயத்தில் நன்கு அறிமுகமுள்ள செல்வாக்குள்ள

ஒருவரைத் தலைவராக அமரவைக்க விரும்பி நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் அவர்களை அனுகிக்கேட்டனர். ஆனால் அவர் சம்மதிக்கவில்லை. ஆகவே தலைவர் பொறுப்புக்குத் தகுதியானவர் கிடைக்கும்வரை அந்தப் பதவியைக் காலியாகவே வைத்திருக்க முடிவு செய்தனர். துணைத்தலைவராக பேராசிரியர் அ.பழனிசாமி, செயலாளராக வழக்கறிஞர் இரா.காந்தி, இணைப் பொருளாளராக கள்ளிப்பட்டி க.தேவணன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அந்தக்காலகட்டத்தில் 1962 ம் ஆண்டு பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் முதல் முறையாக அமெரிக்கச் சுற்றுப்பயணத்தை முடித்துசென்னை வந்திருந்தார். கொங்கு நண்பர்கள் அவரைச் சந்தித்து, சங்கத்தின் மாதாந்திரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பயண அனுபவங்களைப்பற்றி பேசுமாறு அழைத்தனர். மகாலிங்கம் அவர்கள் நண்பர்களின் வேண்டுகோளை ஏற்று கூட்டத்தில் கலந்து கொண்டு தனது அமெரிக்கப் பயண அனுபவங்களை எடுத்துச்சொன்னார். அந்தக்கூட்டத்தில் பேராசிரியர் பழனிசாமி, சி.கே.ராமசாமி, தேவணகவுண்டர், கே.எம்.சென்னியப்பன், மீசை பெருமாள், சீ.ஈஸ்வரமூர்த்தி, இரா.காந்தி, என்.ஆர்.ரங்கசாமி, டி.கே.சுப்ரமணியன், டி.பி.சதாசிவம், புஷ்பண்ணன், இரா.ராசேந்திரன், (காந்தியின் இளவல்) க.செ.கோவிந்தசாமி, ப.சண்முகம், கே.ஏ.சுப்பிரமணியம், ஸ்ரீதேவியப்பன், கே.பழனிசாமி, கே.எம்.சாமிநாதன், ஜி.சங்கரலிங்கம், பைலட் பழனிசாமி, ஆர்.பொன்னுசாமி, கே.பி.சுப்ரமணியம் மற்றும் சிலரும் கலந்துகொண்டனர்.

சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் நடைபெறத் தொடங்கியதும் சுமார் 100 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்திருந்தனர். சங்கத்தின் தொடக்க காலத்தில் நடைபெற்ற சந்திப்புக் கூட்டங்களில் சுய அறிமுகம் முக்கியப் பங்கு வகித்தது. கூட்டத்தில் சிற்றுன்டிக்கான செலவை ஒவ்வொரு முறையும் ஒவ்வொருவர் ஏற்றுக்கொள்வது வழக்கம். புதிதாகத் திருமணமானவர்களுக்கும், பதவி உயர்வு பெற்றவர்களுக்கும், புதிய பதவி அடைந்தவர்களுக்கும் உட்லண்ட்ஸ் ஓட்டலில் பாராட்டு விழா நடைபெறும்.

ஆண்டுக்கு இரண்டு முறை குடும்பத்துடன் சென்னை நகருக்கு அருகில் உள்ள

புகழ்பெற்ற இடங்களுக்கு சுற்றுலா சென்று வருவார்கள். கார் வைத்துள்ளவர்கள் ஒரு இடத்தில் வந்து நிற்க, மற்றவர்கள் அங்கு வந்து ஒன்று சேர்ந்து புறப்படுவார்கள் !

மாதாந்திரக் கூட்டத்தின்போது மாதாந்திர ஏலச்சீட்டு நடத்தப்பட்டது. 1968 வரை சங்கத்திற்குத் தலைவர் இல்லாமல் இருந்தது. பேராசிரியர் பழனிசாமி, வழக்கறிஞர் இரா.காந்தி, கே.பழனியப்பன் ஆகியோர் அந்தக் காலகட்டங்களில் துணைத்தலைவர்களாக இருந்து சங்கத்தை நடத்திவந்தனர். 1968 க்குப்பிறகு பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார். திரு. கே.எம். சென்னியப்பன் செயலாளராகவும் கள்ளிப்பட்டி தேவண கவுண்டர் பொருளாளராகவும் பொறுப்பு வகித்தனர். 1976 ஆண்டு சங்கம் முறைப்படி பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்டபிறகு, சங்கத்திற்கு புதிய உறுப்பினராகச் சேர ரூ. 25 வருடச் சந்தாவாகவும், ரூ. 150 ஆயுள் சந்தாவாகவும் நிர்ணயம் செய்தனர்.

பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் தலைவராக இருந்த போது கே.எம். சென்னியப்பன் அவர்களுக்குப் பிறகு டாக்டர் கே.கே.லட்சுமணன், திரு.க.செ.கோவிந்தசாமி ஆகியோர் செயலாளராக இருந்தனர். திரு. கோவிந்தசாமி மின்வாரியத்தில் பொறியாளராகப் பணியாற்றினார்.

பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களுக்குப்பிறகு திரு.சி.முத்துசாமி ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள் 1983 ல் சங்கத்தின் தலைவரானார். திரு. கே.எஸ்.கே.வேல்மணி செயலாளராக இருந்தார். 1990 ல் டாக்டர் மே.அ.வேலுசாமி சங்கத்தலைவராக அமர்ந்தார். பெருந்துறையைப் பூர்வீகமாகக்கொண்ட தனியார் நிறுவனத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த டி.கே.சுப்ரமணியன் செயலாளராக பொறுப்பேற்றார்.

1993 ல் பி.ஏ.கன்ஸ்ட்ரக்சன் நிறுவனர் திரு.கே.பொன்னுசாமி சங்கத்தலைவராகப் பொறுப்பேற்றார். அவருடன் டி.கே.சுப்ரமணியன் செயலாளர் பொறுப்பு வகித்தார் 1995ல் தொழிலதிபர் திரு.எஸ்.அருணாசலம் தலைவர் பொறுப்பு ஏற்றார். தொழிலதிபர் திரு.கே.பாலசுப்ரமணியன் செயலாளராகப் பொறுப்பேற்றார். 1997ல் தொழிலதிபர் திரு.பி.தேவராசன் தலைவராகவும், அவரோடு நந்தம்பாக்கம் கே.பாலசுப்பிரமணியன் செயலாளராகவும் பொறுப்பேற்றார். 1999ல் திரு.கே.ஆர்.அப்பாவு சங்கத்தலைவராக

அமர்ந்தார். திரு.கே.சி.காளியண்ணன் செயலாளராக இருந்தார். 2001ல் திரு.நல்லா கோவிந்தசாமி சங்கத்தலைவர் பொறுப்பேற்றார். செயலாளராக தொழிலதிபர் ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்கள் பொறுப்பேற்றார். 2003 ல் திரு.கே.சி.காளியண்ணன் சங்கத்தலைவராகப் பொறுப்பேற்றார். 2005 ல் கே.பாலசுப்பிரமணியன் தலைவர் பொறுப்பேற்றார்.

2007ல் திரு.கே.ஆர்.பி.மோகன் சங்கத்தலைவர் பொறுப்பேற்றார். திரு.பரணி கே.பாலசுப்பிரமணி செயலாளர் பொறுப்பேற்றார். 2010ல் திரு.பரணி கே.பாலசுப்பிரமணி சங்கத்தலைராகப் பொறுப்பேற்றார். திரு.ஆர். செல்வராஜ் செயலாளர் பொறுப்பு வகித்தார்.

திரு. சி.முத்துசாமி ஐ.ஏ.எஸ். தலைவராக இருந்த கால கட்டத்தில் முதன்முதலாக சங்கத்திற்கு இராயப்பேட்டையில் சொந்தமாக இடம் வாங்கப்பட்டது. திரு. எஸ்.அருணாசலம் தலைவராக இருந்தபோது ராயப்பேட்டை அம்மையப்பன் வீதியில் முதன் முதலாகக் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்பட்டது. திரு.கே.ஆர்.அப்பாவு, திரு,பி.தேவராசன் ஆகியோர் தலைவர்களாக இருந்தபோது மேற்படி கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. திரு.கே.ஆர்.அப்பாவு தலைவராக இருந்தபோது சங்கத்திற்கு ராயப்பேட்டைடயில் இரண்டாவது இடம் வாங்கப்பட்டது. திரு. நல்லாகோவிந்தசாமி, திரு.கே.சி.காளியண்ணன் தலைவர்களாக இருந்த கால கட்டத்தில் இரண்டாவது கட்டடம் கட்டப்பட்டு “வெள்ளிவிழா இல்லம்”என்று பெயர் சூட்டப்பட்டது. மூன்றாவதாக திரு.கே.பாலசுப்பிரமணியன் தலைவராக இருந்தபோது, இராயப்பேட்டை, பீட்டாஸ் சாலையில் சங்கத்திற்காகவும், கொங்கு நாடு அறக்கட்டளைக்காகவும் இணைந்து கட்டடத்துடன் இடம் வாங்கப்பட்டது.

திரு.கே.ஆர்.பி.மோகன் தலைவராக இருந்தபோது, பீட்டர்ஸ் சாலையில் வாங்கப்பட்ட கட்டடத்தில் கொங்கு நாடு அறக்கட்டளைக்குச் சொந்தமான பகுதியையும், சங்கத்தின் பெயருக்கு வாங்கி கட்டுமானப்பணி தொடங்கப்பட்டது. திரு.பரணி கே.பாலசுப்பிரமணி தலைவர் பொறுப்பேற்று பீட்டர்ஸ் சாலையில்

தொடங்கப்பட்ட கட்டுமானப்பணிகளை முடித்து, ‘‘தீரன் சின்னமலை மாளிகை’’ என்று பெயர் சூட்டப்பட்டது.

சங்கத்தின் வளர்ச்சிக்காகவும் சமுதாயத்திற்கும் பயன்படும் வகையிலும் ‘‘கொங்கு நண்பன்’’ என்ற பெயரில் இதழ் வெளியிடப்பட்டது. 1980 க்குப் பிறகு கொங்கு நண்பன் இதழுக்கு பதிலாக, செய்திமடல் என்ற பெயரில் புதிய மாத இதழ் வெளியிடப்பட்டது. சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் திருமணத் தகவல் மையம் தொடங்கப்பட்டது.

ஆண்டுக்கு ஒருமுறை குடும்பவிழா, விளையாட்டுவிழா ஆகியவை சங்கத்தின் சாாபாக நடத்தப்படுகின்றன. விழாவில் பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்தவர்களுக்கு கொங்குமாமணி, கொங்கு சாதனையளாா், கொங்கு இளம் சாதனையாளா் ஆகிய விருதுகள் வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் 10 ம் வகுப்பு +2 தோ்வுகளில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ–மாணவிகட்கு பரிசும், பாராட்டும் வழங்கப்படுகின்றன.

ஒட்டுமொத்த கொங்கு வேளாளா் சமுதாயத்திற்கு சென்னை கொங்கு நண்பா்கள் சங்கம் ஒரு தாய் வீடு போல் விளங்குகிறது! மாநில அளவில், சமுதாய விழிப்புணா்வை ஏற்படுத்தி உறுதியான, பலமான சமுதாய அமைப்பு உருவாகியுள்ளதற்கு, சென்னை கொங்கு நண்பா்கள் சங்கத்தின் சிறப்பான செயல்பாடுகள் அடிப்படைக் காரணமாகும்.

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வரலாறு

**– எஸ்.ஆர்.இராஜேந்திரன்**, இணைச்செயலாளர்

கடந்த **1980** களின் தொடக்கத்தில் நமது சங்கச் செயல்பாடுகளில் மிகப்பெரிய சுணக்கம் இருந்தது. அன்றைய கால கட்டத்தில், சங்கப் பொறுப்புகளில் இருந்தவர்களிடம். நிலவிய மனவருத்தம், மன வேறுபாடு மற்றும் வேறு சில காரணங்களால் சங்கம் செயல் இழந்திருந்தது. இதனுடைய தாக்கம் திரு.முத்துசாமி IAS (Retd) அவர்களைத் தலைவராக தேர்ந்தெடுக்கும் வரை நிலவியிருந்தது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. திரு.முத்துசாமி IAS (Retd) அவர்கள் ஒரு சில நண்பர்களின் இடைவிடாத வேண்டுதலின் பேரில் **1983** ம் ஆண்டு தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். இதிலிருந்தே சங்கச் செயல்பாடுகளை நாம் அறிய முடியும். எனவே **1980** களின் தொடக்ககாலம் நமது சங்கத்தின் இருண்ட காலம் என்று சொன்னால் அது மிகையாகாது. ஆனால் இந்தக்காலகட்டத்தில் ஒரு சில கொங்கு நண்பர்கள் இந்த சங்கம் மீண்டும் மலர தொடர்ந்து பல விதமான முயற்சிகளில் ஈடுபட்டதன் காரணத்தாலேயே சங்கம் மீண்டும் புத்துயிர் பெற்று **1983** ம் முதல் தொடர்ந்து இயங்க ஆரம்பித்தது இன்று இது ஆல்போல் வளர்ந்து ஓர் அசைக்க முடியாத சக்தியாக உருவெடுத்துள்ளது என்பதை நாம் அறிவோம்.

நமது சங்கம் புத்துயிர் பெற பல நண்பர்கள் காரணமாக இருந்தாலும், ஒரு சில நண்பர்கள், குறிப்பாக பேராசிரியர் எஸ்.குருநாதன் (கரூர்), வழக்கறிஞர் வேடசந்தூர் திரு. வி.வெள்ளைச்சாமி, வழக்கறிஞர் திரு. பாலசுப்பிரமணியன் (திண்டுக்கல்), திரு. கே.ஆர். அப்பாவு (முன்னாள் தலைவர்), திரு. பி.தேவராஜ் (முன்னாள் தலைவர்), திரு. டி.கே. சுப்ரமணியன், திரு. கே.பாலசுப்பிரமணியன் (முன்னாள் தலைவர்), திரு.கே.எஸ்.கே. வேல்மணி (முன்னாள் செயலர்), திரு. சி.ராஜமாணிக்கம், திரு. பி.பி.ராமசாமி, திரு. எஸ்.ஆர்.ராஜேந்திரன், திரு. பி.புஷ்பண்ணன் (முன்னாள் பொருளாளர்), திரு.கே.எஸ்.கோவிந்தசாமி (முன்னாள் செயலாளர்), திரு.கே.பழனியப்பன் (முன்னாள் துணைத்தலைவர்) மற்றுமுள்ள சமூகப் பெரியவர்களுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு சங்கம் மீண்டும் புத்துயிர் பெறக் காரணமாக இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை.

நமது இனத்திற்கே உரிய பண்பாலும், பாரம்பரியத்தாலும் பல இன்னல்களைச் சந்தித்தப்பிறகே, சங்கம் மீண்டும் புத்துயிர் பெற்றது என்பதை நம்மில் பலர் அறிய வாய்ப்பில்லை.

திரு. முத்துசாமி IAS (Retd) அவர்கள் நமது சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர், நமது சங்க வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் படைக்கப்பட்டது என்று சொன்னால் அது மிகையாகாது. அப்போது முதல் புதிய வரவு செலவு கணக்குகள் பதியப்பட்டு ஒரு புதிய உத்வேகத்துடன சங்க நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மாதாந்திரக் கூட்டங்கள் தவறாது நடைபெற்றன. ஒருசில உறுப்பினர்கள் தொடர்ந்து கலந்துகொண்டு சங்க வளர்ச்சிக்கு அடிகோலினார்கள்.

**1985–1986**ம் ஆண்டு வரை மயிலாப்பூரில் நடைபெற்று வந்த சங்கக் கூட்டங்கள் **1986–1987–**களில் இராயப்பேட்டை, அம்மையப்பன் தெரு, பழைய கட்டிடத்தில் நடைபெற ஆரம்பித்தன.

திரு. முத்துசாமி IAS (Retd) அவர்களுக்குப் பிறகு பேராசிரியர் டாக்டர் எம்.ஏ.வேலுச்சாமி (IIT Madras) அவர்கள் சங்கத்தின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சங்கத்தில் அரசு நிறுவனங்களிலும் அரசு சார்ந்த பொறுப்புகளிலும் இருந்தவர்கள் சங்கத்தின் தலைவர் பதவியில் இருந்தார்கள் என்பது நாம் அறிந்ததே.

கடந்த **1989–1990** ம் ஆண்டு நமது சங்க வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் படைக்கப்பட்டது. அதாவது அதுவரை அரசுப் பணி மற்றும் அரசு சார்ந்த பணியில் இருந்தவர்களின் செயல்பாடுகள் குறைந்து முதல்முறை தொழில் முனைவோர் (First Generation Industrialist) அதிக அளவில் சங்கச் செயல்பாடுகளில் ஈடுபட்டு முதன் முறையாக திரு.கே.பொன்னுசாமி (P.A.Construction) அவர்கள், திரு.நல்லகோவிந்தசாமி (முன்னாள் தலைவர்), அவர்களின் பெரு முயற்சியால் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொழில் முனைவோர், சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் தான் நமது சங்கம் ஓர் அபரிதமான வளர்ச்சி பெற்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

திரு.கே.பொன்னுசாமி அவர்கள் தலைவராக இருந்த காலத்தில்தான் கொங்கு நாடு அறக்கட்டளை தொடங்குவதற்கான களம் அமைக்கப்பட்டது. பின் ஒருசில தொழில் முனைவோர்கள் ஒன்று சேர்ந்து அறக்கட்டளை அமைக்கப்பட்டது. ஆனால் அறக்கட்டளை

ஆரம்பிக்கப்பட்டதின் உண்மையான நோக்கம் இன்று மாறுபட்டு அது இன்று கொங்கு நண்பர்கள் சங்கத்தைப் போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

அதன்பின், திரு.கே.ஆர்.அப்பாவு அவர்களின் தலைமையில் எண்.10 அம்மையப்பன் தெரு, இராயப்பேட்டையில் புதிய கட்டிடம் கட்டுவதற்கான ஆயத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. திரு. பி.தேவராஜன் அவர்கள் தலைமையின் கீழ் ஓர் அருமையான கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழா கண்டது. இதன்பின் சங்க நிகழ்வுகளில் எந்தவொரு தொய்வும் இல்லாமல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்தக் காலகட்டத்திற்குப் பிறகு, சங்க விதிகளில் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. குறிப்பாக சென்னைகொங்கு நண்பர்களால், சென்னை கொங்குவாழ் நண்பர்களின் வசதிக்காக ஆரம்பிக்கப்பட்ட சங்கம், கால மாற்றத்தால் தன் கொள்கைகளிலிருந்து விடுபட்டு தமிழ்நாட்டில், குறிப்பாக கொங்கு நாடு வாழ் மக்கள் அனைவரும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். அதற்கு அன்று சொல்லப்பட்ட முக்கியமான காரணங்கள் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் அனைத்து கொங்கு மக்களாலும் ஏற்கப்பட்டு தலைமைச் சங்கமாக செயல்படலாம் என ஒப்புக்கொள்ளப்பட்டது. அடுத்ததாக, கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சியில், குறிப்பாக சங்கக் கட்டிட நிதியானது கொங்கு நாட்டிலிருந்து பெருமளவு பெறப்பட்டது. எனவே நிதியுதவி வழங்கியவர்கள் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக ஏற்கப்பட்டனர். ஏனெனில் அவர்கள் சென்னை வரும்போது சங்கக் கட்டிடத்தில் தங்க முன்னுரிமை பெறவும், பெருமைப்படுத்தும் நோக்கிலும் சேர்க்கப்பட்டனர் என்பதும்தான் உண்மை, அதன் பின்னர், அந்தச் சலுகை அனைத்து தரப்பு கொங்குச் சொந்தங்களுக்கும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்களாகும் சலுகை வழங்கப்பட்டது.

தற்சமயம், கடந்த 26–02–2012 ம் தேதியன்று நடந்த சிறப்புப் பொதுக்குழுவில் தற்போதைய சட்ட விதிகள் மீண்டும் மாற்றப்பட்டு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தில் சென்னை பெருநகர் கொங்குவாழ் நண்பர்கள் மட்டுமே உறுப்பினர்களாகப் பதிவு செய்ய முடியும் என்று சட்ட விதிகள் திருத்தப்பட்டுள்ளது.

# கொங்கு இன சமுதாயத்திற்கு ஒரு வேண்டுகோள் !

**- எஸ்.கே.கருப்பண்ணன்**

முன்னாள் செயற்குழு உறுப்பினர்

உலகின் மூத்த இனம் தமிழ் இனம் என்றும், ஆதி முதல் மொழி தமிழ் மொழி என்றும் மேலை நாட்டு வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவர்.

தமிழ் இளத்தின் இதயம் போன்றது கொங்கு இனமக்கள் என்பர். கொங்கு இனத்தின் உட்கூறுகளான அந்துவன், காடை, மனியன், ஆந்தை முதலிய குலங்கள் பற்றி சங்க இலக்கியங்களில் காணலாம்.

உயர்ந்த நாகரியப் பண்பாட்டில் சிறந்து விளங்கியவர்கள் நம் முன்னோர்கள் என்பதும், ஆரியர், மகமதியர், சாளுக்கியர், மராட்டியர், வெள்ளையர்கள் ஆதிக்கம் செலுத்திய காலத்திலும், இன்றுவரை நம் பண்பாட்டுக்கூறுகளான விருந்தோம்பல் கடுமையான உழைப்பு, நேர்மை இருந்துவருவதே அதற்குச்சான்று பகரும்.

நம் உறவு முறைகளிலும், திருமணச் சடங்குகளிலும் நம் இனத்திற்கே உரிய தமிழ்ப் பண்பாட்டுடன் இருப்பதும் வைதீக முறை தவிர்த்து வந்திருப்பதும் நாம் அனைவரும் அறிந்ததே.

குழந்தை பிறப்பு சடங்கு, புதுமனைப் புகுவிழா, திருமண விழா, ஈமச்சடங்கு எதிலும் வைதீக பிராமணர்களை வைத்து காரியங்கள் செய்வதில்லை

திருண விழாவில் நம் சமூகத்தைச் சேர்ந்த அருமைகாரர்களும், பரிகாரிகள் என்று சொல்லப்படும் கொங்கு நாவிதர்களும் முன்னின்று நடத்துவர். அழகு தமிழில் மங்களவாழ்த்து பாடப்படுமே தவிர புரியாத வடமொழி சுலோகங்கள் ஒலிப்பதில்லை

கொங்கு வேளாளர் பச்சைத்தமிழர்கள் என்ற அடையாளம் அவர்கள் அன்றாட வாழ்வில் அனுசரிக்கும் தமிழ்ப்பண்பாடு தழுவிய பழக்க வழக்கங்களே. பெயரை வைத்தே கொங்கு வேளாளர் என்றும், எந்த கூட்டத்தைச் (குலத்தைச்) சேர்ந்தவர்கள் என்றும் அறிவோம். தனித்தமிழ்ப் பெயர்களே அதற்குச் சான்றாகும். இந்த நிலை

கொஞ்சம் கொஞ்சமாக மாறிவருவது கொங்கு வேளாள இனத்திற்கே உரிய தனித்த அடையாளம் மறைந்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

புதுமனைப் புகுவிழா, திருமணவிழா, இறுதிச்சடங்கு ஆகியவற்றில் தமிழ்ப்பண்பாட்டிற்கு மாறாக பிராமணர்களை வைத்துக் காரியங்களைச் செய்வதும், குழந்தைகளுக்கு தமிழ்ப்பெயர் தவிர்த்து தெரியாத, புரியாத மொழியில் பெயர் வைப்பதும், ராகு, கேது, செவ்வாய், தோசம் என்று இளம் ஆண் பெண் திருமணத்தைத் தள்ளிப் போடுவதும் நம் இனத்திற்கே உரிய தனிப்பெருமையைக் குலைப்பதோடு,இன்றைய கணினி யுகத்தில் அதிலும், மனிதன் செவ்வாய் கிரகம் சென்று ஆய்வு நடத்தும் காலத்தில், நம் இனம் பெரும் பின்னடைவைச் சந்திக்க நேரிடும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

கொங்கு வேளாளர் இனத்தின் தனித்தன்மை பெருமையுடன் நிலைத்திட :–

1. குழந்தைகளுக்கு நல்ல தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள்
2. குடும்ப விழாக்கள் அனைத்திலும் அன்னியர் தலையீடும், அன்னியர் பண்பாடும் கலக்காமல் கொங்குக் குல வழக்கப்படி நம்மவர்களை வைத்தே விழாக்கள் நடைபெறச் செய்யுங்கள்
3. நம் குழந்தைகளுக்கு கூட்டம், குலம் என்றால் என்ன என்றும், என்ன கூட்டம், குலம் என்பதையும் விளக்கிச் சொல்லவேண்டும்.
4. தேவையற்ற பழக்கவழக்கங்களை அதாவது சகுனம் பார்த்தல், ஆருடம் பார்த்தல், ஈடுபோடுதல் போன்ற மூட நம்பிக்கைகளுக்கு ஒரு முழுக்கு போட்டு, முன்னேற்றப் பாதையில் சென்று சிறப்புற வேண்டும்.

# எனக்குத் தெரிந்த வரலாறு
# 1970 - 1976

- **ப.முத்துசாமி,** சென்னை

நான் சென்னைக்கு 1970 ஜனவரியில் வந்து வேலையில் சேர்ந்தபொழுது எனக்குத் தெரிந்த ஒரே நண்பர் திரு. பி.புஷ்பண்ணன். சங்கத்தின் முன்னாள் உதவி செயலாளர் அவர். நான் திருவல்லிக்கேணி சீசன் லாட்ஜில் இருவர் உள்ள அறையில் தங்கிக்கொண்டு வேலை செய்துவந்த காலத்தில் (1971–ல்) பழைய Wood Lands Hotel ல் கொங்கு நண்பர்கள் சங்கம் ஒரு சந்திப்பிற்கு ஏற்பாடு செய்திருந்தது. அதற்கு வருமாறு திரு.புஷ்பண்ணன் கேட்டுக்கொண்டிருந்தார். அங்கு திரு. அ.பழனிச்சாமி எம்.எல். (சட்டக்கல்லூரி முதல்வர்), முனைவர் கே.கே.லட்சுமணன் (பச்சையப்பன் கல்லூரி தாவரவியல் துறைத் தலைவர்), திரு. இரா.காந்தி (Senior Advocate), திரு. இரா.ராஜேந்திரன் மற்றும் தலைமைச் செயலகத்தில் பணியாற்றிய சிலரும், திரு. பி.கே.பொன்னுசாமி (PA Construction), கே.துரைசாமி, (வழக்கறிஞர்) மற்றும் பலரும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு இருந்தனர். சுமார் 25 பேர் இருப்பார்கள். திரு. கோவைசெழியன் சற்றுத் தாமதமாக வந்து சேர்ந்தார். அவரை மேடையின் மேல் உட்காரவைத்தனர். செயலாளராக திரு. கே.கே.லட்சுமணன் இருந்தார். தலைவர் என்ற பதவியில் யாரும் இல்லை.

கூட்டத்தின் முதல் பகுதி ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்துகொள்வது. அதாவது வரிசையாக ஒருவர் ஒருவராக எழுந்து பெயர், பிறந்த ஊர், சென்னையில் தங்கியுள்ள இடம், வேலை அல்லது தொழில் மற்றும் கூட்டம் இவற்றைச் சொல்லி அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டும். காபி, மிக்சர் போன்ற சிற்றுண்டியுடன் கூட்டம் முடிந்துவிடும், திருவல்லிக்கேணி பெரிய தெருவில் உள்ள பார்த்தசாரதி டுடோரியல் பள்ளியில் ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை கூட்டம் நடந்துகொண்டு வந்தது. காஞ்சிபுரம், பாண்டிச்சேரி இவற்றில் இருந்து சிலர் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் கொங்கு சங்கம் மாதாந்திர சீட்டு நடத்தி வந்து 1000/– 5000/– போன்ற தொகைக்கு மாதாந்திர ஏலம் எடுக்கின்றவர். 10 சதவிகிதத்தை சங்கத்திற்கு கொடுத்து விட வேண்டும்.

திரு. காந்தி, திரு.லட்சுமணன் (Secretary), தேவண்ணன் ஆகியோர் சீட்டு சந்தாதாரர்களாக இருந்து நடந்து வந்தது. இந்த கமிசன் பணத்தில் சிற்றுண்டி மற்றும் இதர செலவுகள் செய்யப்பட்டன. பத்து சதவிகிதம் சற்று அதிகமாக இருந்தது. இருந்தாலும் சங்கத்திற்கு நிதி தேவையிருந்ததால் 10 சதவிகிதம் கமிசன் சங்கத்திற்குக் கொடுக்கப்பட்டு வந்தது. கவுந்தபாடி செட்டிபாளையம், காடை கூட்டம் திரு. அ.பழனிச்சாமி அவர்கள் சட்டக்கல்வி இயக்குநர் என்ற உயர்பதவியை அடைந்தார். அது சமயம் அவர்கள் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி டுடோரியலில் நடந்த கூட்டத்தில் நமது இனத்தைச் சேர்ந்த ஒருவர் தேர்வாணையக் குழு உறுப்பினராக வேண்டும் என்று வற்புறுத்தினார். அந்தக் கூட்டத்தில் இருந்தவர்கள் எல்லாம் 'நீங்கள் தான் அந்த பதவிக்கு தகுதியானவர்' என்று ஊக்குவித்தனர்.அதன்படி அரசு திரு. அ.பழனிச்சாமியை நமது இனத்தின் சார்பில் தேர்வாணையத்தின் உறுப்பினராக நியமித்தது.

1972ல் நடந்த தேர்தலில் திரு.கோவை செழியன் காங்கேயம் தொகுதி எம்.எல்.ஏ. ஆக தேர்ந்து எடுக்கப்பட்டார். மந்திரிசபை ஏற்படுத்தும்பொழுது திரு.கோவைசெழியன் அன்றைய முதல்வர் திரு.கலைஞரிடம் விவசாயம், அல்லது தொழில் துறையைத் தமக்குக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார். திரு. கண்ணப்பன் (கிணத்துக்கடவு) எந்தத் துறையைக் கொடுத்தாலும் அதில் சேர்ந்து பணி ஆற்ற ஒப்புக் கொள்வதாக கூறினார் என்றும், அதன் காரணமாக கோவை செழியன் எல்லாத் தகுதியும் இருந்தும் அமைச்சராக முடியவில்லை என்றும் கூறப்பட்டது.

இந்தக் கால கட்டத்தில்தான் அ.பழனிசாமி தேர்வாணைய (Public Service Commission) உறுப்பினர் நமது சமுதாயத்தை பிற்படுத்தப்பட்டோர் என அரசு அறிவித்தால் மட்டுமே உயர்பதவிகளை நாம் அடையமுடியும் என்று கூறினார் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எவ்வாறு செய்வது என்பது பற்றிய முடிவையும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி டுடோரியல் பள்ளியில் எடுக்கப்பட்டது. அந்த சமயத்தில் தான் அருட்செல்வர் மகாலிங்கம் அவர்கள் சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். கோவையில் மாநாடு நடத்தி கொங்குவேளாளர் இனம் பிற்படுத்தப்பட்ட இனமாக அறிவிக்க வேண்டி கூட்டம், ஊர்வலம் நடைபெற்றது. கோவை செழியன், எம்.ஜி.ஆர். ஆரம்பித்த அ.தி.மு.க வில் சேர்ந்து இருந்தார்.

அப்பொழுது சட்டமன்ற எதிர்கட்சியாகிய அ.தி.மு.க. வில் முக்கியமானவராக இருந்தார் சட்டசபையில், "கொங்குவேளாளர் இனத்தைப் பிற்படுத்தப்பட்ட இனமாக அறிவிக்க வேண்டும். இல்லைஎன்றால் வரும் பொது தேர்தலில் இதையே தேர்தல் வாக்குறுதியாக வைத்து களத்தில் அ.தி.மு.க. இறங்கும்" என்று திட்டவட்டமாக தெரிவித்தார். அரசு கொங்கு வேளாளர் சமுதாயத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்து 1975 ஆம் ஆண்டு அறிவித்தது.

1976 ல் மாணவர் அமைப்பு திரு. அருட்செல்வர் அவர்கள் தலைமையில் ஸ்ரீலேகா ஹோட்டலில் திரு. நல்லகோவிந்தசாமி அவர்கள் (காவல்துறை ஆய்வாளர்) ஒத்துழைப்பில் நடந்தது. அதில் என்னை சிறப்புப் பேச்சாளராக அழைத்து இருந்தார்கள். மாணவர்கள் சுயதொழிலில் ஈடுப்படும் கருத்துகளை பிரிண்ட் செய்து கொடுத்திருந்தேன். திரு. டி.எஸ்.நடேசன் எம்.எஸ். அவர்களும் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

# கொங்கு வேளாளர் சங்கமம்

- புலவர் **தே.ப.சின்னசாமி,** நாமக்கல்

1. கொங்கு நாட்டின் குடிமக்கள் கொங்குவேளீர் !
தங்களது குலதெய்வத் திருவருளால்
எங்கெங்கும் உழைப்பாலே உயர்ந்தார்கள்
சங்ககாலப் பெருமைக்குச் சான்றாவார்.

2. சங்கமது வைத்தின்றும் அனைவோரும்
பங்கமின்றி ஒன்றிணைந்து குடும்பவிழா
சங்கமதில் கருத்துரையால் மனதொன்றி
தங்களது பெருமைக்கும் வித்திட்டார்கள் !

3. சாதனைகள் செய்தார்க்கு விருதளித்து
சாதனைக்கு வருவோர்க்கும் பரிசளித்து
ஆதவனாய் அறிவொளியில் மிதக்கவைத்தோம் !
வேதமுறை தமிழ்ச்சான்றோர் முன்னிலையில் !

4. குடும்பவிழா குலமக்கள் ஒற்றுமைக்கு
எடுப்பாக அமைந்ததிங்கு! பெருமைதானே!
விடுதலைக்கு முன்னோடி தீரனவன்
ஒடுக்கமுற்ற கொங்கினத்தை உயரவைத்தான்!

5. சிலை வைத்து ஆண்டுதோறும் நினைவிடத்தே
தலைவர்கள் தொண்டர்கள் வழிபடுதல்
நிலைத்திருக்கும் நினைவகத்து எந்நாளும்
மலையளவு புகழ்கொண்ட கொங்குவேளீர்

6. பண்பாடு மறையாமல் கொங்குநாட்டின்
மண்பெருமை காத்திடுவோம் சங்கமதில்
எண்ணத்தால் உறுதிமொழி எடுத்திடுவோம்
விண்முட்டும் நம்பெருமை எந்நாளும்

7. சென்னை கொங்கு நண்பர்கள் சங்கமது
சின்னமலை மாளிகையும் கொங்குநாடு
நன்மை தரும் இல்லமதும் வெள்ளிவிழா
முன்னில்லம் எல்லாமும் நம்சிறப்பே !

## 2012 ஆம் ஆண்டு 10–ஆம் வகுப்பு அரசு தேர்வில் முதல் மூன்று இடங்களைப்பெற்றவர்கள்

### முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | D.கவின் |
| த/பெ | : | P.P.தண்டபாணி |
| ஊர் | : | வெங்கமேடு, கரூர் |
| பள்ளி | : | சேரன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கரூர் |
| மதிப்பெண் | : | 496/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநில அளவில் 2ம் இடம், மாவட்டத்தில் முதல் முதல், பள்ளியில் முதல் இடம் |

### முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஸ்வாதி சென்னியப்பன் |
| த/பெ | : | Dr.S.சென்னியப்பன் |
| ஊர் | : | ஈரோடு |
| பள்ளி | : | பாரதி V.பவன் மெட்ரிக் உயர்நிலைப்பள்ளி |
| மதிப்பெண் | : | 496/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநில அளவில் 2ம் இடம் |

### இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | டி.வினுமிதா |
| த/பெ | : | துளசிமணி |
| ஊர் | : | ஈரோடு |
| பள்ளி | : | கொங்கு நேஷனல் மெட்ரிக் உயர்நிலைப்பள்ளி |
| மதிப்பெண் | : | 495/500 |
| சிறப்புத் தகுதி | : | பள்ளியில் முதலிடம், மாவட்டத்தில் 2ம் இடம் |

## 2012 ஆம் ஆண்டு 10–ஆம் வகுப்பு அரசு தேர்வில் முதல் மூன்று இடங்களைப்பெற்றவர்கள்

### இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | K.ஷர்மிளா |
| த/பெ | : | கிருஷ்ணமூர்த்தி |
| ஊர் | : | ஈரோடு |
| பள்ளி | : | ஸ்ரீவேதாத்திரி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு |
| மதிப்பெண் | : | 495/500 |
| சிறப்புத் தகுதி | : | பள்ளியில் முதலிடம் மாவட்டத்தில் 2ம் இடம் |

### இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | P.K.பூஜாஸ்ரீ |
| த/பெ | : | இரா.பழனிசாமி |
| ஊர் | : | கே.செட்டிஅள்ளி, தருமபுரி |
| பள்ளி | : | SRV ஹைடெக் மெட்ரிக் உயர்நிலைப்பள்ளி ராசிபுரம் |
| மதிப்பெண் | : | 495/500 |
| சிறப்புத் தகுதி | : | பள்ளி முதலிடம், மாவட்டத்தில் முதலிடம் |

### மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | விஷ்னுப்பிரியா |
| த/பெ | : | வி.நடராசு |
| ஊர் | : | ஈரோடு |
| பள்ளி | : | பாரதி வி.பவன் மெட்ரிக் உயர்நிலைப்பள்ளி திண்டல் |
| மதிப்பெண் | : | 494/500 |
| சிறப்புத் தகுதி | : | பள்ளியில் 2ம் இடம், மாவட்டத்தில் 3ம் இடம் |

## 2012 ஆம் ஆண்டு 10–ஆம் வகுப்பு அரசு தேர்வில் முதல் மூன்று இடங்களைப்பெற்றவர்கள்

### மூன்றாம் இடம்

| | |
|---|---|
| பெயர் | : P.முகிலன் |
| த/பெ | : என்.கே.பெரியசாமி |
| ஊர் | : புகழூர், கரூர் |
| பள்ளி | : TNPL மெட்ரிக் உயர்நிலைப்பள்ளி, காகிதபுரம் |
| மதிப்பெண் | : 494/500 |
| சிறப்புத் தகுதி | : மாநிலத்தில் 4ம் இடம், மாவட்டத்தில் 2ம் இடம், பள்ளியில் முதல் இடம் |

### மூன்றாம் இடம்

| | |
|---|---|
| பெயர் | : D.இலக்கியா |
| த/பெ | : கே.துரைசாமி |
| ஊர் | : நல்லிபாளையம், நாமக்கல் |
| பள்ளி | : கிரீன்பார்க் மெட்ரிக் உயர்நிலைப்பள்ளி, நாமக்கல் |
| மதிப்பெண் | : 494/500 |
| சிறப்புத் தகுதி | : மாவட்டத்தில் 2ம் இடம், மாநிலத்தில் 4ம் இடம் |

### மூன்றாம் இடம்

| | |
|---|---|
| பெயர் | : பி.ராகுல் |
| த/பெ | : பன்னீர்செல்வம் |
| ஊர் | : ப.வேலூர், நாமக்கல் |
| பள்ளி | : கிரீன் பார்க் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி |
| மதிப்பெண் | : 494/500 |
| சிறப்புத் தகுதி | : மாவட்டத்தில் 2ம் இடம் மாநில அளவில் 4ம் இடம் |

2012 ம் ஆண்டில் நடைபெற்ற 10 ம் வகுப்பு அரசுப்பொதுத்தேர்வில் கலந்துகொண்டு கொங்கு இன மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றதைப்பாராட்டி சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

## 2012 ஆம் ஆண்டு 12–ஆம் வகுப்பு அரசு தேர்வில் முதல் மூன்று இடங்களைப்பெற்றவர்கள்

### முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | C.மணிகண்டன் |
| த/பெ | : | சிதம்பரம் |
| ஊர் | : | வெள்ளாளப்பட்டி, கரூர் |
| பள்ளி | : | விவேகானந்தா மேல்நிலைப்பள்ளி பாண்டமலங்கம் |
| மதிப்பெண் | : | 1188/1200 |
| சிறப்புத் தகுதி | : | மாநில அளவில் 2ம் இடம் |

### இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | P.நிவேதா |
| த/பெ | : | பத்மநாதன் |
| ஊர் | : | உறையூர், திருச்சி |
| பள்ளி | : | கிரீன்பார்க் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி நாமக்கல் |
| மதிப்பெண் | : | 1185/1200 |
| சிறப்புத் தகுதி | : | பள்ளியில் 4ம் இடம்<br>மாவட்ட அளவில் 5ம் இடம் |

### மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | P.K.உத்ரா |
| த/பெ | : | S.கனகராஜ் |
| ஊர் | : | பொள்ளாச்சி |
| பள்ளி | : | BVM மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி பொள்ளாச்சி |
| மதிப்பெண் | : | 1182/1200 |
| சிறப்புத் தகுதி | : | பள்ளியில் 3ம் இடம் |

## 2012 ஆம் ஆண்டு 12–ஆம் வகுப்பு அரசு தேர்வில் முதல் மூன்று இடங்களைப்பெற்றவர்கள்

### CBSE சிறப்புப்பரிசு

| | |
|---|---|
| பெயர் | : J.ஹேமாபிரியா |
| த/பெ | : கே.ஜெகதீசன் |
| ஊர் | : சென்னை |
| பள்ளி | : DAV பெண்கள் சீனியர் செகன்டரி பள்ளி கோபாலபுரம், சென்னை |
| மதிப்பெண் | : 488/500 |

2012 ம் ஆண்டில் நடைபெற்ற 12 ம் வகுப்பு அரசுப்பொதுத்தேர்வில் கலந்துகொண்டு கொங்கு
இன மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றதைப்பாராட்டி சங்கம் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

## சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

**05–08–2012** அன்று நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 1. | Ball Throw (Boys)<br>III & IV Std. | I சி.மிதுன்<br>II எம்.ஸ்ரீசரண்<br>III பி.பவித்ரன் |
| 2. | Ball Throw (Boys)<br>V & VI Std. | I ஜி.நித்தீன்<br>II ஜே.கிருஷ்ய ராகவ்<br>III எஸ்.சுந்தர் |
| 3 | Ball Throw (Boys)<br>VII & VIII Std. | I எஸ்.தனுஷ்<br>II பி.மிதுன் குமார்<br>III ஆர்.சசிதரன் |
| 4 | Ball Throw (Boys)<br>IX & X Std. | I ஆர்.சரன்ராஜ்<br>II இ.சுகில்<br>III சி.எஸ்.ராஜஸ்ரீபதி |
| 5 | Shotput (Boys)<br>16 - 20 Years | I பி.சந்திரகுமார்<br>II எஸ்.தினேஷ் ராஜ்<br>III எஸ்.கலைவாணன் |
| 6 | Shotput (Boys)<br>21 to 30 Years | I ஆர்.கந்தகார்த்திக்<br>II எஸ்.பாலாஜி<br>III என்.கார்த்திக் |
| 7 | Shotput (Men)<br>31 to 40 Years | I கே.எஸ்.ராம்மோகன்<br>II ஆர்.எஸ்.மயில்வாகனன்<br>III எஸ்.சரவணன் |
| 8 | Shotput (Men)<br>41 to 50 Years | I எஸ்.ஆர்.இரவிச்சந்திரன்<br>II ஆர்.கே.பாலன்<br>III இசைபாலு |

| | | | |
|---|---|---|---|
| 9 | Shotput (Men)<br>51 to 60 Years | I<br>II<br>III | கே.ராஜாமணி<br>பி.சதாசிவம்<br>லோகநாதன் |
| 10 | Shotput (Men)<br>61 and above | I<br>II<br>III | தண்டபாணி<br>கே.கிருஷ்ணசாமி<br>பழனியாண்டி |
| 11 | Running Race (Boys)<br>LKG & UKG 25 Metres. | I | டி.பவீஸ் |
| 12 | Running Race<br>I & II Std. (Boys) 25 Metres | I<br>II<br>III | எம்.ஆதிஷ்<br>கே.என்.பிரவீன் ரஞ்சன்<br>எஸ்.சக்திவேல் |
| 13 | Running Race<br>50 Metres (Boys)<br>III & IV Std. | I<br>II<br>III | பி.பவித்ரன்<br>ஆர்.சர்வேஷ் சக்திவேல்<br>ஆர்.அனிருதரன் |
| 14 | Running Race<br>75 Metres (Boys)<br>V & VI Std. | I<br>II<br>III | இ.தினேஷ்<br>இ.பிரனேஷ்<br>ஜி.நித்தீன் |
| 15 | Running Race<br>200 Metres (Boys)<br>VII & VIII Std. | I<br>II<br>III | எஸ்.தனுஷ்<br>கே.எஸ்.சாய்விஷ்வா<br>பி.மிதுன்குமார் |
| 16 | Running Race<br>400 Metres (Boys)<br>IX & X Std. | I<br>II<br>III | சி.எஸ்.இராஜாஸ்ரீபதி<br>ஆர்.சேயோன் ராஜ்<br>ஜெ.கிரிஜய் |
| 17 | Running Race<br>200 Metres (Boys)<br>16 to 20 Years | I<br>II<br>III | பி.ஆர்.சந்திரகுமார்<br>எஸ்.ஜி.முரளி<br>ஆர்.சூர்யா |
| 18 | Running Race<br>200 Metres (Boys)<br>21 to 30 years | I<br>II<br>III | கே.வடிவேல்<br>கே.பிரகாஷ்<br>என்.கார்த்திக் |

| | | | |
|---|---|---|---|
| 19 | Running Race<br>100 Metres (Men)<br>31 to 40 years | I<br>II<br>III | ஜி.அருண்ராஜா<br>பி.தனசேகர்<br>டி.கோபிசங்கர் |
| 20 | Running Race<br>100 Metres (Men)<br>41 to 50 years | I<br>II<br>III | பி.சேகர்<br>பி.இளங்கோவன்<br>ஜி.மோகன்ராஜ் |
| 21 | Running Race<br>100 Metres (Men)<br>51 to 60 years | I<br>II<br>III | எஸ்.அன்பழகன்<br>ஆர்.சுந்தர்<br>கே.லோகநாதன் |
| 22 | Running Race (Men)<br>Above 60 years | I<br>II<br>III | ஏ.சிவசாமி<br>பழனியாண்டி<br>பழனிசாமி |
| 23 | Ball Throw (Girls)<br>III & IV Std. | I<br>II<br>III | ஆர்.மௌனிகா<br>சூர்யா<br>எஸ்.கோதவை |
| 24 | Ball Throw (Girls)<br>V & VI Std. | I<br>II<br>III | நேஹாதுரை<br>பி.சர்னிதா<br>பி.ஹோவிதா |
| 25 | Ball Throw (Girls)<br>VII & VIII Std. | I<br>II<br>III | ஜி.நர்மதா<br>ஆர்.மஞ்சரி<br>கே.நந்தினி |
| 26 | Ball Throw (Girls)<br>IX & X Std. | I<br>II<br>III | ஆர்.மனுமித்ரா<br>ஏ.சங்கீதா<br>ஆர்.லக்ஷனா |
| 27 | Ball Throw (Girls)<br>16 to 20 years | I<br>II<br>III | ஜே.விநீஷா<br>எஸ்.பாலஅபிராமி<br>எஸ்.ஷில்பா |

| | | | |
|---|---|---|---|
| 28 | Ball Throw (Girls)<br>21 to 30 years | I<br>II<br>III | ஆர்.செல்லகிருத்திகா<br>எஸ்.பத்மப்பிரியா<br>எஸ்.தீபா |
| 29 | Ball Throw (Women)<br>31 to 40 years | I<br>II<br>III | விமலா<br>திலகவதி<br>சித்ரா இளமுருகன் |
| 30 | Ball Throw (Women)<br>41 to 50 years | I<br>II<br>III | ஜெயமணி<br>சுமதி<br>சிவகாமி |
| 31 | Ball Throw (Women)<br>51 to 60 years | I<br>II<br>III | ஏ.வசந்தி<br>கலைச்செல்வி<br>தமயந்தி |
| 32 | Ball Throw (Women)<br>61 and above | I<br>II<br>III | சரஸ்வதி<br>அமிர்தா முருகன்<br>வைரமணி |
| 33 | Running Race (Girls)<br>25 Metres<br>LKG & UKG | I<br>II<br>III<br>IV<br>V | டி.நிகாரிகா<br>டி.ஜனிஷா<br>பி.மோனிகா<br>கே.எம்.பிரனிதா<br>ஜி.ரதிதேவி |
| 34 | Running Race (Girls)<br>25 Metres<br>I & II Std | I<br>II<br>III<br>IV<br>V | என்.மிர்துளா<br>எம்.ஹர்ஷிகா<br>இ.வர்சினி<br>ஏ.நக்ஷ்த்ரா<br>எஸ்.சங்கவிதா |
| 35 | Running Race (Girls)<br>50 Metres<br>III & IV Std | I<br>II<br>III<br>IV | ஏ.அனுஷா<br>ஆர்.மௌனிகா<br>எஸ்.கொற்றவை சிவை<br>எஸ்.நந்தனா |

| | | | |
|---|---|---|---|
| 36 | Running Race (Girls)<br>50 Metres<br>V & VI Std | I<br>II<br>III | இ.ஐஸ்வர்யா<br>பி.சர்நிதா<br>பி.ஹோவிதா |
| 37 | Running Race (Girls)<br>75 Metres<br>VII & VIII Std | I<br>II<br>III | ஜி.நர்மதா<br>எம்.லத்திகா<br>பி.அமிர்தா |
| 39 | Running Race (Girls)<br>100 Metres<br>XI & X Std | I<br>II<br>III | ஏ.சங்கீதா<br>ஆர்.மனுமிதா<br>ஆர்.லக்ஷனா |
| 40 | Running Race (Girls)<br>100 Metres<br>16 & 20 years | I<br>II<br>III | ஜே.வினிஷா<br>எஸ்.ஷில்பா<br>எஸ்.லத்திகா |
| 41 | Running Race (Women)<br>100 Metres<br>21 & 30 years | I<br>II<br>III | டி.சுகன்யா<br>ஆர்.இரமாப்பிரியா<br>ஆர்.சுமிதா |
| 42 | Running Race (Women)<br>100 Metres<br>31 & 40 years | I<br>II<br>III | Dr.விஜயாசுரேஷ்<br>சாவித்திரி சீனிவாசன்<br>வசந்தி தனசேகர் |
| 43 | Running Race (Women)<br>100 Metres<br>41 to 50 years | I<br>II<br>III | சுமதி கிருஷ்ணமூர்த்தி<br>ஜெயமணி குழந்தைவேல்<br>கவிதா அருணாசலம் |
| 44 | Running Race (Women)<br>100 Metres<br>51 to 60 years | I<br>II<br>III | கே.வசந்தி<br>எம்.அமிர்தா<br>பார்வதி அப்பாவு |
| 45 | Running Race (Women)<br>100 Metres<br>61 & Above | I<br>II | பழனியம்மாள் பழனிச்சாமி<br>கமலா அருணாசலம் |

46 Couples Ball Catching

I கே.சீனிவாசன் – சாவித்திரி

II கிருஷ்ணமூர்த்தி – சுமதி

II செந்தில் – கீதா

**கயிறு இழுக்கும் போட்டி**

**வின்னர்**

1. பழனிவேல்ராஜன்
2. குமார்
3. கௌதம்
4. சூர்யா
5. நவீன்
6. பிரகாஷ்
7. செல்வராஜ்
8. ராம் பிரசாத்
9. பெரியசாமி
10. பழனிசாமி
11. அரவிந்த்
12. மயில்சாமி

❖❖❖❖❖❖

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

22–07–2012 அன்று வெள்ளி விழா இல்லத்தில் நடந்த பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான போட்டிகளில் பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | போட்டியின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| | **நடனப்போட்டி** | |
| 1. | 5 – 10 வயது வரை | 1 சங்கவிதா செந்தில்குமார் |
| | | 2 கார்த்திகா ரவிக்குமார் |
| | | 3 ஆதிஷ் முத்துசாமி |
| | | 3 விஜய் ஆதித்யா |
| 2. | 10 வயது மேல் | 1 எஸ்.என்.வேதிகா சேகர் |
| | | 2 நிமிதா ரவிக்குமார் |
| | | 3 லத்திகா மோகன் ராஜ் |
| | **பாட்டுபோட்டி** | |
| 3. | 5 – 8 வயது வரை | 1 கார்த்திகா ரவிகுமார் |
| | | 2 நந்தனா சீனிவாசன் |
| | | 3 ஸ்ரீரஞ்சனி பத்ரிநாதன் |
| 4. | 9 – 10 வயது வரை | 1 லத்திகா மோகன் |
| | | 2 நிமிதா ரவிக்குமார் |
| | | 2 ஸ்ரீ அபிதா |
| | | 3 வேதிகா சேகர் |
| | | 3 ப்ரிதிகா பிரபுராஜ் |
| | **பேச்சுப்போட்டி** | |
| 5. | 5 – 10 வயது வரை | 1 நட்சத்திரா அருண்ராஜ் |
| | | 2 ஸ்ரீ ரஞ்சனி பத்ரிநாத் |

| | | |
|---|---|---|
| 6. | 10 – 15 வயது வரை | 1 தீபிகா தங்கவேல்<br>2 ஸ்ரீ அபிதா செந்தில்குமார்<br>3 லத்திகா செல்வராஜ் |

**கட்டுரை**

| | | |
|---|---|---|
| 7. | பள்ளி<br>5 – 9 வகுப்பு வரை | 1 லத்திகா மோகன் ராஜ்<br>2 நிமிதா ரவிக்குமார்<br>3 மஞ்சரி சேகர்<br>ஆறுதல்<br>1 ஸ்ரீ மதுமதி<br>2 எஸ். சிவராகவ் |
| 8. | 10 – 12 வகுப்பு வரை | 1 அமுதினி கொங்குவேல்<br>2 திகல் சிவசெல்வம்<br>3 சி.எஸ்.இராஜஸ்ரீபதி |
| 9. | கல்லூரி | 1 யாலினி கொங்குவேல் |

**கவிதை**

| | | |
|---|---|---|
| 10. | பள்ளி | 1 எம்.பி.அமிர்தஸ்ருதி<br>2 தீபிகா தங்கவேல்<br>2 அமுதினி கொங்குவேல்<br>3 எஸ்.சிவரஞ்சனி<br>3 வி.நிவேதிகா<br>ஆறுதல்<br>1 அதீஷ் அஸ்வந்த்<br>2 எஸ்.சக்திவேல் |
| 11. | கல்லூரி | 1 யாழினி கொங்குவேல் |

## ஓவியப்போட்டி

| | | |
|---|---|---|
| 12. | 5 – 9 வயது வரை | 1 லக்ஷ்கா சுந்தர் |
| | | 1 எஸ்.என்.வேதிகா |
| | | 2 நட்சத்திரா |
| | | 2 சக்திவேல் சுப்ரமணி |
| | | 3 ஆர். அனுருத்துன் |
| | | 3 என்.மிருதுளா |
| | | 3 ப்ரநவ் ராகவ் |
| | | 3 ஹரிதா |
| | 10 வயது மேல் | 1 நிவேதா விஜயன் |
| | | 1 லத்திகா மோகன் ராஜ் |
| | | 1 சஞ்சய் செந்தில் வேலன் |
| | | 2 நிமிதா ரவிக்குமார் |
| | | 2 சஞ்சீவ் நித்தியபிரகாஷ் |
| | | 3 எம்.பி.பி.நித்திகா பிரபுராஜ் |
| | | 3 எம்.பி.அமிர்தசுஸ்ருதி |
| | | 3 ஜெ.கிரிஷை ராகவ் |

## மாறுவேடப்போட்டி

| | | |
|---|---|---|
| 11. | 5 வயதிற்கு கீழ் | 1 அக்ஷரா அருள்ராஜ் |
| 12. | 6 – 10 வயது வரை | 1 நட்சத்திரா அருண்ராஜ் |
| | | 2 லத்திகா சுந்தர் |
| | | 3 அனுரித் ரவிச்சந்திரன் |
| | | 3 கார்த்திகா ரவிகுமார் |
| | | 3 சங்கமித்ரா செந்தில்குமார் |
| 13 | 10 வயதிற்கு மேல் | 1 லத்திகா மோகன்ராஜ் |
| | | 2 நிமிதா ரவிக்குமார் |
| | | 3 பிரித்திகா பிரபுராஜ் |
| | | 3 ஸ்ரீ அபிதா செந்தில்குமார் |